39

Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.


தொகுதி 1. } 1911ஆம் மார்ச்சுமீ 15உ. சாதாரணஆம் பங்குனிமீ 2உ. { பகுதி 11



ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்



வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| ஒரு ஜீவன் ஒரு சரீரம் விட்டு மறுசரீரம் பெறும் வரையிலுள்ள மத்தியகாலம் | சிவராம சுப்பிரமணியன் | ௱௪௭ |
| கீடம் பிரமரமாதல் (புழுவண்டாதல்)—என். எஸ். ஜம்புநாதன் | | ௱௪௯ |
| மதங்களுக்குள் சகோதர தர்மம் நிகழவேண்டுமென்பது A. B. | ப. நா. | ௱௫௪ |
| குண்டலினீ சக்தி—ப. நா. | | ௱௬௨ |
| பிரணவஉபாசனை—நடேசஸ்வாமி | | ௱௬௫ |
| புத்தகவரவு—பத்திராதிபர். | | ௱௭௪ |
| சமாசாரம்—பத்திராதிபர். | | ௱௭௫ |



# THE

## ORIENTAL PROGNOSTIC OBSERVATORY.

Corresponding Director: **V. V. Ramanan.**

F. Z. S. (LOND.) O.M.D.S.F.V. (BERLIN).

M.O.S.M.F (PARIS): ETC.

Charges very moderate for the work turned out !

We do not for a moment deny that there are plenty of impostors who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems. Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN LEO-writes to us

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, SAMI PILLAI ST., Chulai, Madras, N.C.

**V. V. Ramanan,**
Corresponding Director.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 1. } 1911ஆம் மார்ச்சுமீ 15உ. சாதாரணஆம் பங்குனிமீ 2உ. { பகுதி 11

## ஒரு ஜீவன் ஒரு சரீரம் விட்டு, மறு சரீரம் பெறும் வரையிலுள்ள மத்திய காலம்,

இதைப்பற்றி சென்ற நவம்பர்மீ (Theosophist) பத்திரிகையில் விஸ்தாரமாக ஸ்ரீமாந். லெட்பீடர் என்பார் எழுதியிருக்கின்றார். அதினின்று சில முக்கியமான அம்சங்களை இப்போது எடுத்து எழுதுவோம்.

1. அறிவின்மிக்கார், ஞானிகள் சம்பந்தமாக, ஒரு இறப்புக்கும் மற்றொரு பிறப்புக்கும் மத்தியகாலம் அதிகமாக இருக்கிறது. சுமார் 2000-வருஷங்களுக்கு, மேற்செல்லும்.

2. சாதாரணமான அறிஞர்கள், இறந்த மேல் சுமார் 1500 வருஷங்களுக்குள் திரும்பி சரீரம் எடுப்பார்கள்.

3. அவர்களைவிட அறிவில் கீழானபடியில் உள்ளவர்களான வெகு சாதாரணஜனங்கள் இறந்தமேல், 200 அல்லது 300-வருஷங்களுக்குள் சரீரமெடுப்பார்கள்.

4. நாகரீகமில்லாத மூட ஜனங்கள் 40 முதல் 100 வருஷங்களுக்குள் திரும்புவார்கள்.

5. மஹாபாதகர்களும், தீயர்களும் இறந்த மேல் வெகு சீக்கிரத்தில் வேறு சரீரம் எடுப்பார்கள்.

6. பொதுவாய், எவ்வளவுக்கு எவ்வளவு இளமையில் மரிக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரம் மறுஜன்மம் எடுப்பார்

கள். புவர்லோக, ஸுவர்க்கலோகங்களில் வஸிப்பதற்கு வேண்டிய கர்மங்கள் குறைகின்றமையால் என்று அறிக. நம்மவர்களுக்குள், மூன்றுவயதுக்குள் ஒரு குழந்தை மரணமானுல், சீக்கிரம் அக்குழந்தையே அத்தாயின் வயிற்றில் பிறக்கும் என வார்த்தை உண்டு. அக்குழந்தையை குழியில் புதைப்பார்கள். அக்கினியால் தகனம் செய்யார். "குழிப்பிள்ளை மடியிலே" என்ற வசனம் இங்கு கவனிக்கத்தக்கது

7. ஞானவழிகளில் அதிகமாக ஒழுகாதவன் இறந்தமேல் அதிசீக்கிரத்தில் சரீரம் எடுப்பான். இவ்விதமாக இறப்புக்கும் அடுத்த மறு பிறப்புக்கும் உள்ள காலம் இத்தன்மையாக வித்தியாசப்படுதலுக்குக் காரணம் என்னவென்று விசாரிப்போம். மனிதன், திரிலோகி, அதாவது பூலோகம், புவர்லோகம் (காமலோகம்) சுவர்க்கலோகம் இவைகளில் மாறிமாறி வஸிக்கிறவன். இறந்தமேல், ஸ்தூலசரீரக்கழற்சி ஏற்படும். பின்பு, சொற்பகாலம் புவர்லோகத்தில், அதாவது, முன் பூமியின்கண் இருந்தகாலத்தில் ஜீவன் உண்டாக்கிக்கொண்ட ஆசாபாசங்களுக்குத் தக்கவாறு, குறுகியகாலம் அல்லது நீண்டகாலம் சூக்ஷ்மசரீரத்துடன் நடைபெறுகிறுன். புவர்லோக அனுபவத்தால் ஆசாபாசங்களின் பற்று விடவே மனோமயகோசக்கழற்சி ஏற்படும். அதாவது அசுத்தமானவிக சரீரம் விலகுகிறது. இதைவிட்டு ஜீவன், சுவர்க்கலோக அனுபவம் அடைகிறுன், இந்த லோகத்தில் ஜீவன்பூமியில் இருந்துஅவன் செய்த நன்மைகள், அவன் எண்ணிய உயர்நலம் அமைந்த சிந்தனைகளுக்குத் தக்கபடி, அதிககாலம் அல்லது குறைந்தகாலம் ஜீவன் சுகிர்தத்தைத அனுபவிக்கின்றுன். பின்பு க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி என்று சாந்தோக்கிய உபநிஷத்தில் உபதேசித்தபடி, பூமியில் பிறக்கிறுன். இதனுல், மனிதன் பூமியில் கழிக்கும் வாழ்நாளைப்பற்றி அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று ஏற்படுகிறது. அதிக காலம் பூமியில் ஜீவித்தல் மாத்திரம் போதாது. ஊனை ஓம்பி விருதா காலம் கழிப்பதினுல் பிரயோசனமில்லை. தன்னை மறந்து பிறர்நலம் பயக்கும்படியாக ஸத்கர்மங்களைச் செய்தலும் தீயஎண்ணங்களை எண்ணுமல் நல்ல எண்ணங்களைக் கொள்ளுதலும், சுருக்கமாகச் சொல்லுமிடத்து, சன்மார்க்கத்தில் நடைபெறுதல் சுவர்க்கலோகத்தில் வஸிக்கும் காலத்தை அதிக தீர்க்கமாகச் செய்யும்.

சிவராமசுப்பிரமணியன்.

# "கீடம் பிரமரமாதல் (புழு வண்டாதல்)."

நம்மைச் சுற்றிலும் ஜீவித்துக்கொண்டிருக்கும் பிராணிகளில் அதிகமாக நாம் பார்ப்பது பூச்சிகளே. நம்மவர்களுக்குள், ஊருகிற எவ்வகைப் பிராணிகளையும் பூச்சியென்றே பொதுப்படையாகக்கூறுவது இயல்பாக இருக்கிறது. நாக்குப்பூச்சி என்றும், மண்ணுளிப் பூச்சி என்றும், பவளப்பூச்சி என்றும், இவைபோன்றவைகளை சகஜமாக நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், பிராணி சாஸ்திரம் உணர்ந்த நிபுணர், சிலவகை அங்க அடையாளங்கள், கை, கால் அமைப்புகள், பிரஜோத்பத்தி முறைகள் இவைகளோடு காணப்படும் ஜீவராசிகளுக்கு மாத்திரமே "பூச்சி" என்று பெயரிடுவர். அப்படிப்பட்ட அங்க அடையாளங்களாவன:

உடம்பும், கைகால்களும் சிறுதுண்டுகளாக தனித்தனி அசைவுச்செயலுடன் கூடி அமைக்கப்பட்டு, இருக்கவேண்டும். இவ்விஷயத்தில் சில ஜீவராசிகளான நண்டு, தேள், சிலந்திப் பூச்சி, இவைகளை ஒத்திருக்கின்றன. ஆனால், பின் கூறப்படும் சில தேகஅமைப்பின் வேற்றுமையினால் பூச்சிகள் என்ற ஜீவராசிகள் வேறு எனப் புலப்படும்.

அதன் உடம்பானது, தலை, மார்பு, வயிறு என மூன்று பாகமாகப் பிரிந்தும், ஆறுகாலும், தலையில் இரண்டு மீசையும், முதுகில் இரண்டு ஜோடி இறக்கைகளும் உடையதாக இருக்கும். பூச்சிகளின் உற்பத்தி முறைகளாலும் தோற்றத்தினாலுமே, ஒரு ஜீவராசியைப் பூச்சி என அறியலாம்.

மற்றப் பிராணிகளைப் போல, உண்டு, உடல் வளர்த்து, ஊக்கத்துடன் பெண்டிர்காடி, மக்கட்பேறுடன் வாழ்ந்திருப்பது பூச்சிகளுக்கும் இயல்பாகவிருப்பினும், இட்ட முட்டையானது உடனே தாய்ப் பூச்சியைப்போலாகாமல், நடுவில் அடையும் ஆச்சரியகரமான விகாரங்களும், அவைகளின் செய்கைகளும், பார்க்கவும், கேட்கவும், யாவருக்கும் அற்புதமாகவேயிருக்கும்.

பூச்சிகளில் அநேக விதங்கள் இருக்கின்றன. இரவில் விளக்கில் விழும் விட்டில் என்ற அந்துப்பூச்சியை இப்போது உதாரணமாக எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்வோம்.

நான்கு சிறகுகளுடனும், இரண்டு மீசைகளுடனும் மிருதுவாக அமைக்கப்பட்டு காணப்படும் இவ்வந்துப்பூச்சி முட்டையிலிருந்து அந்துப்பூச்சியாகப் பிறப்பதல்ல; பிறப்பது யாவரும் கண்டு விலகும்படியான கம்பளிப் பூச்சியாம். அக்கம்பளிப் பூச்சிகள் கூட்டம் கூட்டமாய் பூவரசு, முருங்கை, முதலான விருக்ஷங்களின் அடிமரத்தின் மேற்பரப்பில் அடைஅடையாய் அப்பிக்கொண்டிருப்பதைக் காணலாம். இப்படி அவ்தரித்த ரோமருஷியின் விருத்தாந்தம்என்னவென்று சற்று விசாரிப்போம். இதற்கு ஆகாரம் அதிகம் வேண்டும். அதற்கேற்ப, பற்களோடு கூடிய வாயும், உடல் முழுதும் நிரம்பப் பெற்ற வயிறும், குடலும், ஆசனத்துவாரமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பச்சிலைகள்தான், இக்கம்பளிப் பூச்சிகளுக்கு உருசியான ஆகாரம். அவைகளை வயிறுரத் தின்று, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளருகின்றன. குருவி, ஓணான், முதலிய பிராணிகள் தங்களை எளிதில் கொத்தி உண்ணாதபடி இவைகள் ஒருவகை அரிப்பும், துர்நீரும் நிறையப் பெற்ற நரைத்த மயிர்போன்ற அடர்ந்த மேற்போர்வையினால் தற்காத்துக்கொள்ளும் சக்தியுடையனவாயிருக்கின்றன. வயிறு பொறுக்கத் தின்றதின்மேல், அவைகள் உறங்குமிடந்தேடி வீட்டுக் கூரையிலோ, சுவர் மூலையிலோ, தூண்சந்துகளிலோ, உடம்பினின்று உதிரும் மயிர்களைக் கொண்டும், வாயினின்று ஊறும் உமிழ்நீராகிய பட்டு நூலினாலும் தன்னைச்சுற்றிலும் மயிர்க்கூடாரமாக ஒரு கவசத்தை அமைத்துக்கொண்டு, அதனுள் அது சுருங்கிக்கிடக்கக் காணலாம். இந்நிலைமையையும், அதற்காக அது படும் சிரமத்தையும் பார்த்தால், தான் உள்ளடங்கி சமாதிநிலை கொள்ளும் யோகியின் பெருமைபோல ஒருவாறு விளங்கும். இரண்டொரு தினத்தில் சமாதியிலிருக்கும் பூச்சியின் கபாலம் வெடித்து அதன் வழியாக, கை, கால், கண், வாய் இவைகள் ஒன்றும் வியக்தப்படாத லிங்கமாகிய ஒரு குழவிபோல் ஒட்டுப்புழு (Chrysalis) வாகமாறிவிடும். அது முதலில் வெளுத்து, இரண்டொரு தினத்தில் கறுஞ்சிவப்பு நிறத்துடன் விளங்கும். அதன் வாய்ப் புறத்தில் பூர்வத்தில் ஏற்பட்டிருந்த கம்பளிப் பூச்சியின் மேல்தோல் சுருங்கி இருக்கும். ஐந்து ஆறு தினத்தில், இக்குழவியின் மேல் வெடித்து, அதினின்று தாயைப்போன்ற இறக்கையுள்ள பூச்சியாக தன் சுய ரூபத்

துடன் வெளியாகிப் பறக்கும். அது அடைந்த கடைசி ஜன்மாவில் தான் ஆண் பெண்ணாகப் பிரிந்து காணலாம். அந்துப்பூச்சிக்கு அக் காலத்தில் ஆகாரம் அதிகம் தேவையில்லை. தாகத்திற்கு கொஞ் சம் ஜலமாவது, தேனாவது, பூந்தாதுகளாவது கிடைத்தால் போதும். கூடிய சீக்கிரத்தில் ஆண் பெண் பல்கி ஆயிரக்கணக்கான முட்டை களை அடுக்கடுக்காய் பெண்பூச்சி இட ஆரம்பிக்கும். கம்பளிப் பூச்சியாகிய தன் குழந்தைக்கு எந்த இலையில் பிரியமோ அம் மரத்தின் இடுக்குகளிலும், அல்லது இலைகளின் அடிப்புறத் திலும் முட்டையிடும். மேற்கண்ட விஷயங்களால் அந்து பூச்சியை நான்குவித நிலையில் ஒருவன் காணக்கூடும், என்பது விளங்குகிறது. முதலில் பறக்கக்கூடிய பூச்சியாகவும், இரண்டா வது அடுக்கும் 100 மடங்கு சிறிய முட்டையாகவும், மூன்றாவது ஊர்ந்து நூல் நூற்கும் கம்பளிப்புழுவாகவும், நான்காவது லிங்காகார மாகத் தோன்றும் குழவிபோல் ஒட்டுப்புழுவாகவும், ஆகி கடை முறையில் குழவியினின்று இறக்கை முதலிய சர்வ அங்கங்களுடன் பூச்சியாகப் பறப்பதையும் காண்போம்.

இதேவிதமான உற்பத்தி விகாரங்களைச் சில மாறுபாட்டுடன் மண்ணால் கூடுகட்டும் குளவியினிடத்திலும் பார்க்கலாம். குளவி யும் அந்துப்பூச்சியைப் போல ஒருவகைப் பூச்சிதான். அதற்கும் மீசை, கால்கள், இறக்கைகள் உண்டு. ஆனால் அவைகளிமே முட் டைக்காக மண்கூடு ஒன்றைத் தாய்க்குளவி அமைக்கும். அம்மாதிரி கூடுகளை விட்டத்திலும், நிலைமூலைகளிலும் குளவி மண்சேர்த்து உருண்டைசெய்து வாயினாலும், முன்னங்கால்களினாலும் சுமந்து வந்து கூடு கட்டுவதை அநேகர்கவனித்திருக்கலாம். அப்படி கட்டி முடிந்த சிறுகூட்டில், ஒன்றுமுதல், சிலசமயங்களில் இரண்டுமூன்று முட்டைகளைத் தாய்க் குளவி இட்டு, அவைகளினின்று உண்டாகும் தன் குஞ்சுகளாகிய புழுக்களுக்கு ஆகாரத்தினிமித்தம் செடிகளில் ஊரும்படியான அநேக பச்சைப்புழுக்களையோ, வேறு சில ஜாதிப் புழுக்களையோ, சிலந்தி, பாச்சைமுதலிய பிராணிகளையோ பிடித்துக் கொணர்ந்து உள்ளடைத்து, பின்பு அக்கூட்டை மூடுவதைப் பார்த்தி ருக்கிறோம். இவ்விதமாக, குளவியானது தன் முட்டைகளை, அதினி ன்று உண்டாகும் குஞ்சுகளுக்கு ஆகாரத்தையும் தயாரித்துவைத்து

மண்கூட்டை முற்றிலும் அடைத்துவிடுகிறது. நுட்பமான மண் சுவரில் கூடு அமைந்திருக்கிறபடியால் குஞ்சுகள் முட்டைகளினின்று வெளிவருங்காலத்தில் உண்ண உணவு இருப்பதுமன்றி சுவாசிக்கக் காற்றும் எளிதில் கிடைப்பதாயிருக்கிறது. முதலில் அக்குஞ்சு ஒரு பச்சைப்புழுவைப்போலத்தானிருக்கும். ஆனால், ஆகாரம் ஏற்கனவே இருக்கின்றமையால் அதிக நடமாட்டம் வேண்டுவதில்லை. அதனால்கால்கள் நன்றாய் அமைக்கப்படவில்லை. உண்டு பெருக்க வாயும் பற்களும் தயாராய் அமைந்துள்ளன. இப்புழுப்பருவம் முடியும் வரை, தாயால் வைக்கப்பட்ட ஆகாரம் போதுமானது. பிறகு கம்பளிப்பூச்சியைப் போல சமாதிநிலையிலிருந்து குழவிப் பருவத்தை அடைந்து அதனின்று இறக்கைகளுடன் குளவியாக மண்ணறையில் ஒரு துவாரம் செய்துகொண்டு வெளிக்கிளம்பிப் பறக்கும். ஆகவே அந்தப்பூச்சியைப்போல குளவிக்கும் நான்குவித நிலைமைகள் உண்டென்பது இதனால் விளங்கும். மனிதரைப்போல் தன் குழந்தைகளுக்கு ஆகாரத்தைத் தேடிவைப்பது அற்பமான பூச்சிகளுக்கும் இயல்பாக இருக்கிறது. இச்செய்கை அன்பின் பயனது அன்றோ? ஆனால் இவ்வன்பு, பிரக்ஞையுடன் பற்றியதன்று. இயற்கை அறிவால் ஏற்பட்டதென்று சொல்லுவார்கள்.

குளவிபோன்ற பூச்சிகளின் உற்பத்தி விகாரங்களையும், குளவி தன் குழந்தைக்குவேண்டி கூடு கட்டுதல், உணவு சேகரித்தல் முதலிய காரியங்களையும், ஒருவாறு கவனித்த நம் பெரியோர்கள் தத்வார்த்த விசேஷணங்களை நிருபணம் செய்யுங்காலத்தில் குளவியினால் வைக்கப்பட்ட பச்சைப்புழுவானது தன்னைக் கொட்ட வருமே என்ற பயத்தினாலே குளவியை நினைத்து நினைத்து குளவி ரூபம் அடைந்ததுபோல, ஜீவான்மாக்களும் பரமாத்மாவை மனத்தில் நினைத்து நினைத்து, தன்னை மறந்து தியான நிலையில் இருக்கும் பட்சத்தில் அவர்களும் ஈசுவர ரூபமாகலாம் என்ற விசேஷத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைத் தான் "ப்ரமரகீட நியாயம்" என்று சிலர் கூறுவர். தத்வம் உயர்ந்த தத்வம். உதாரணமும் கூடியவரையில் இயற்கைக்கு அதிக விரோதமில்லாதது தான்; ஆனால், மண்ணறையிலிருந்து வெளிப்படும் குளவி தாய்க்குளவியால் வேறாக வைக்கப்படும் பச்சைப்புழுவான இரைப்புழுவன்று, ஆனால் அஃதை உண்டு

வளர்ந்த குளவிக் கருவே பல விகாரங்களை அடைந்து குளவி ஆனது என்பதை மாத்திரம் குறிப்பாக நாம் அறிந்துகொள்ளவேண்டியது.*

இவ்விதம் கேவலம் பிராணிசாஸ்திர விசாரணையால் அரிய பெரிய தத்துவங்களை நாம் அறிகின்றோம். இவைகளைப்பற்றிய ஆராய்ச்சியினால், நமது அறிவும் விருத்தியாவதுடன், ஜகத்சிருஷ்டியின் அமைப்பும், யாவருக்கும் தெரியவரும். அவற்றை ஆராய்ந்தால் ஜகத்திற்கு ஆதிமூலமான இறைவனை அறியவும் கூடும்.

எந். எஸ். ஜம்புநாதன், B. A., L. T., F. Z. S.

## நன்மொழி.

72. உன்னை நம்பு. அது இரும்பினும் வலிதான பிடிப்பு. அதைப் பற்றிக்கொண்டுதான் மேலேறலாம். தம்மை நம்பினர் தாம் வெற்றி பெறுவர். உனக்குக்கிடைத்ததேசம், காலம், ஜாதி, ஸ்திதி, உறவினர், நண்பர் எல்லாம் முன்வினைப்பயன் என நினை. அவைகளின்மேல் சினம் கொள்ளற்க.

73. எல்லாம் நேர்மையாகவும் சாந்தமாகவும் நிகழும்காலத்தில், மனம் தளராமல், நிமிர்ந்து நிற்றல் அதிசயமன்று; எல்லாரும் பயந்து இடம்விட்டு ஓடும் காலத்தில், இடம் பெயராமல், நின்ற நிலையில் மனச்சோர்வடையாமல் நிற்றலே, நிற்றல். அதுவே தெய்வ சம்பத்தான தீரத்தன்மை.

74. தியாகம்—என்றால் மொட்டாக இருந்த ஆன்மா மலர்தல். மலரவே, அகந்தை, மமதை என்ற தடைகளின்றி இருத்தல், தக்ஷணமே திவ்விய ஜோதிஸ்காணுதல்; ஜீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும்.

75. தேவ ரகசியங்களைத் தியானிக்குங்கால், உன்னைத் தாழ்மையாக நினை. தூய்மையான எண்ணங்கொள். பகலவன் மஹிமையைப் பார்க்கவேண்டின், கையின்கண்ணுள்ளவிளக்கை அணைத்தல் வேண்டுமன்றோ?

* வழக்கமாய் இந்த பிரமரகீட நியாயத்தைப் பரிணாம வாதத்திற்கு ஆதாரமாகச் சொல்லுகிறதுண்டு. (ப-ர்.)

## 4-ம் அதிகாரம்.

(முன் 325-ம் பக்கம் தொடர்ச்சி.)

### பரமாத்மா சரீரம் பெறுதல்.

பிரபஞ்சமே, பரமாத்மாவின் சரீரம் எனச்சொல்லலாம். அதன் ஒவ்வொரு பாகமும், ஒவ்வொரு அணுவும், அதன் அதன் கண் இயங்கும் பிராணன் இல்லாவிடில், அவைகள் இருத்தல் எங்ஙனம்? அவைகள் தனியாகவும், தொகுதியாகவும் இருத்தலுக்குக் காரணம் அப்பிராணனின் இயக்கமே. ஆத்மா வெளிப்படையாய்த் தோன்றுவதற்கு உபாதியாக, பிரகிருதி இருந்துள்ளது. அத்தோற்றம் நிகழாமற்போனால், பிரகிருதி என்றால் அர்த்தமில்லை, பலனில்லை, உபயோகமில்லை. இந்த உண்மை எல்லா மதத்திலும் உள்ளது. எல்லா வஸ்துக்கள் சம்பந்தமாகவும் பொருந்தும். பல மதங்களில், இந்த உண்மை பூர்ணமாய்ச் சொல்லப்படவில்லை. குறைவாய் பிரஸ்தாபித்துள்ளது. “சில மனிதர்களிடம் இறைவன் வசிக்கிறார், சில மனிதர்கள் இறைவன் அருள் பெற்றார்கள்” என்கிறோம். மற்றவர்களிடம் இறைவன் இல்லை என்பது கருத்தல்ல. அவர்களிடம் விசேஷமாக விளங்குகிறார் என்பது கருத்து. “நாம் எல்லோரும் அவர் புத்திரர்கள் ஆவோம்.” *

2. ஹிந்துமத சம்பிரதாயத்தில் அவதாரம் என்பது சொல்லப்படுகிறது. அவதாரம், என்றால் உயரவிருந்து கீழே இறங்குதல் என்பது பொருள். உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு, திரிமூர்த்திகளில் இரண்டாவதான அம்சர் வெளிப்படையாகத் தோன்றுவர். “பிறப்பில்லாதவன் ஆனாலும், குறைவில்லான் ஆனாலும், பூதங்களுக்கு எல்லாம் ஈசனாயினும், யான் என் மாயையை வசப்படுத்திக்கொண்டு, என்மாயையினால் பிறக்கிறேன், அவதரிக்கிறேன். உலகில் தருமம் குறையவும், அதர்மம் ஏற்றம் பெறவும் நேரிடும் காலமெல்லாம் நான் அவதரிப்பேன். நல்லோரைக் காத்தற்கும், தீயோரை முற்றும் ஒழித்தற்கும் தருமத்தை நன்கு நாட்டுதற்கும் நான் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்.” †

---

* Acts xvii 28.

† பகவத்கீதை IV 6—8.

3. ஞானிகள், ரிஷிகள், யோகிகள் இருக்கின்றார்கள். சிலர் மாசற்ற மனத்தினராய், பரிசுத்தமான ஒழுக்கமுள்ளவராய், நற்செயல் புரிகிறவராய் உள்ளவர்கள். அதனால் ஸ்தூல சரீரிக ளாயினும், அவர்களிடம் தங்குகின்ற ஆத்மா ஒளிமங்காமல் பிரகாசிக்கின்றார். அவர்கள் "நடமாடும் கோவில்களாக" இருக் கின்றார்கள். இவர்களே உலகத்தில் ஈசுவரனின் தூதர்கள், உயர் நலமுள்ள சேவகர்களாய்; ஈசுவர தத்துவங்களை உபதேசிக்கின்றவர் கள். சத், சித், ஆநந்தம் என்ற ஈசுவர சுவாபம் இத்தன்மையது என்று விளக்கிக்காட்டும் திறமையுடையவர்கள் இவர்களே! இவர் களால் தான், மனிதர்களுக்கு அந்தந்த மதகிரந்தங்கள் வெளியிடப் படுகின்றன. ஹிந்துக்கள் தங்கள் மதத்திற்கு எவ்விதம் தீர்க்கதர் சிகளான ரிஷிகள், மஹாத்மாக்கள் ஏற்பட்டு, மத கிரந்தங்களை அளி த்திருக்கின்றார்களோ அவ்விதம் மற்ற மதங்களுக்குள்ளும் தீர்க்கதர் சிகள் ஏற்பட்டு அந்தந்த மத கிரந்தங்களை அளித்திருக்கிறார்கள் என்றும், அவைகள் அந்த மதங்களுக்கு உபயோகமானவைகளெ ன்றும் ஹிந்துக்கள் சந்தோஷமாய் யாதொருவிவாதமுமின்றி ஒப்புக் கொள்ளுவார்கள்.

4. மேற்கண்டபடி, விசேஷமான அவதாரங்கள், ஈசுவர அருள், அம்சம் பெற்றவர்கள் இருக்கிறார்கள் என்பதும், அல்லாமல், ஒவ் வொரு மனிதனும் ஈசுவர அவதாரமென்றும், ஒவ்வொருவன் ஹிரு தயத்தினிடமும் ஈசுவரன் இருக்கிறான் என்றும் ஹிந்துமதத்தின ரின் அபிப்பிராயம். அவர்கள, ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு பிராணியும், மரம், பூண்டு, தாதுவர்க்கம் எல்லாம் ஈசுவரனின் சரீர ங்கள். ஈசுவரன் அவைகளின்கண் இருக்கின்ற சரீரி என்பார் நாமரூபங்களான சரீரங்கள் மாறும், இறக்கும். அவைகளின் கண்ணுள்ள இறைவனுன ஆத்மா என்றும் உளன் *

5. ஜோராஸ்தர் மதத்தில், 14 குருக்களான ஜோராஸ்தர்க ளில், முதன்மையாக தலைமை பெற்றவர் முதலில் அவதரித்த ஜோ ராஸ்தர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய ஞானஒளி

* [எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும், இலங்கும் உடல் உயிர் அனை த்தும் ஈசன் கோவில்.]

யால், அம்மதத்தினர்கள் உலகில் ஒழுகுகின்றார்கள். அஹுர் மாஸ்டா என்பார் அந்த ஆதி ஜோராஸ்தருடன் நேராக உரையாடினார். அவர் மூலமாக அம்மதத்தின் தர்மமுறை வெளிப்படையாக வந்தது. மனுவும், ரிஷிகளும், ஹிந்துக்களுடைய மதத்தில், எந்தஸ்தானத்தை வகிக்கின்றார்களோ, அந்தஸ்தானத்தை, அந்த ஆதிஜோராஸ்தர் வகிக்கிறார். ஸோஸியாஷ் (Sosiosh) என்று பெயருள்ள ஈசுவர பிரஸந்நரான தோற்றம். ஹிந்துமதத்தின், அவதார புருஷன் போன்றவர் என்று சொல்லலாம்.

6. யூதர்கள் ஸம்பிரதாயத்தில், அந்ஜாதியாரின் கோத்திர பிதாவாக கடவுள் நண்பரான, ஏபிரஹாம் என்பார் மதிக்கப்படுகின்றார். மோஸெஸ் என்பார் அவர்களின் தர்ம சாஸ்திர கர்த்தர். அவர் பின்சந்ததித்தொடர்பான ஞானிகளும் தீர்க்கதர்சிகளும், ஈசுவரனின் சங்கற்பத்தை அப்போதைக்கப்போது வெளியிட்டிருக்கின்றார்கள். "இன்னார் இன்னாருக்கு ஈசுவரன் தமது சித்தத்தை வெளியிட்டார்,'' என்ற வசனம், ஈசுவரன் அருள் பெற்றவர், அல்லது விசேஷ அம்சம் பெற்ற ஞானிகளைக் குறிப்பிடு வசனமாக அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகிறது. "ஈசன் அருள் இப்போது என் மேல்வந்திருக்கிறது" என்றார் ஐஸேயா என்ற தீர்க்கதர்சி. "இதோ! பார் என் வார்த்தைகளை, உன் நாவால் வெளியிடுகிறேன் என்று கடவுள் என்னிடம் சொன்னார்'' என்கிறார் ஜெரிமியா என்ற ஞானி. "டேவிட் என்பவர் வம்சத்தில் ஒரு குரு அவதரிக்கப்போகின்றார். அவர்பால் ஈசன் அருள் இறங்கும்.'' என்று ஐஸேயா என்பார் சொல்கிறார். இவ்வார்த்தைகள் தம்மைத் தான் குறிக்கின்றன என்று, கிறீஸ்து என்பார், உரிமைகொண்டாடினார். *

7. பௌத்தமத ஸம்பிரதாயத்தில், பகவான் புத்தர் என்பார் அஞ்ஞான (அவித்யை)த்தின் வரம்பைத் தாண்டிய முக்தர் என்றும், ஞானஒளி பெற்றவர் என்றும், பல ஜன்மாந்தரங்களில் உலகத்திற்கு உழைத்து, பாடுபட்டு, அதன் பயனும் அவைகளின் தேஜோமயமான மகுடம் போன்று விளங்கா நின்றார் என்றும் சொல்லப்படுகின்றது. உலககுருவாய் ஏற்பட்டு போதித்தவர் என்ற உயர்

---

* St. Luke I. c. 16—21.

நலம் அமைந்த அதிகாரம்பெற்று, அந்த உத்தரவாதமான கைங்கரியத்தை, ஆயிரக்கணக்கான வருஷங்களாய் நடத்தி வந்து, கடைமுறையில், கடைசியாக, உலகத்தில் பிறந்து, இந்தக் கடைசி சரித்திரத்தில், பூர்ண ஞானம்பெற்று, நிர்வாணம் அடைந்தார். பகவான் புத்தர், என்ற மஹாத்மா, தனிப்பட்ட ஒரு மஹாபுருஷன் தான் இந்தப்பதவியைப் பெற்றார் என்பது, பௌத்த மதத்தினர்களின் கொள்கையன்று, இவர்போன்று அநேக புத்தர்கள் உண்டாயிருக்கிறார்கள். பலஜன்மங்களில், உலகத்திற்கு உழைத்து, "தன்னுயிர் ஓம்பாமல், பிறர் உயிர் ஓம்பினராய்," உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் பிறருக்கு என்று தியாகம் செய்யும் தீரராய் இருக்கின்ற ஒவ்வொரு மனிதரும் இத்தன்மையான பதவியைப் பெறலாகும், என்பது அம்மதத்தினரின் அபிப்பிராயம். பௌத்தசீனர் ஒருவர் சொல்லுகிறதாவது, "உள்ளே நோக்குமின், நீவிர் புத்தர் ஆவீர்." புத்தர் என்றால் மனிதனே பிரகிருதியை ஜயித்து, தன் வசமாக்கும்வரை பலமுறை ஜன்மம் எடுத்து, பூர்ணம் பெற்ற ஞானியாவான்.? அஃது அங்கிலையைக் குறிப்படும் சொல்லாம். அங்கிலையின் அச்சு அடையாளமாம்.

8. கிறிஸ்துமதத்தில், ஹிந்துமதத்தைப் போல், திரிமூர்த்தியின் இரண்டாம் அம்சர் அவதாரம் பெறுவர். ஆனால், ஹிந்துமதத்தில் பல அவதாரங்கள் உண்டு. கிறிஸ்துமதத்தில் ஒரே அவதாரம் தான் என்று சொல்லப்படுகிறது. "உலகத்தின் முடிவில், ஒரே தடவை, அவர் வெளிப்படுகிறார்." *

"முற்காலங்களில், தீர்க்கதர்சிகள் மூலமாய், நம்முன்னோர்களுடன் கடவுள் உரையாடினார். இக்கடைசியான காலத்திலோ, தம் முடைய புத்திரன்மூலமாய் உரையாடுகிறார். அவர்தான் எல்லா சம்பத்துக்களுக்கும் பாத்தியஸ்தர். அவர் அம்சமாகத்தான், கடவுள் உலகங்களை உண்டுபண்ணினார்." †

கிறிஸ்துவர்களின் அபிப்பிராயத்தில், இந்த கிறிஸ்து அவதாரமே அவதாரம். உலகத்தில், கடவுளை, இவவிதமாக பூர்ணமாக

* Hebrews ix 26.

† Hebrews ii—2

வெளிப்பட மனிதரூபமாகத் தோன்றியிருக்கிறார். பூர்ணமான கடவுள், பூர்ணமான மனிதன் என்ற *இந்த அவதாரம் தனிப்பட்டது. ஒப்பு உயர்வு இல்லாதது. இதுஒன்றேதான் உள்ளது என்றாலும், மனிதன், தன்னுள் அவரை உறைவிடமாகப் பெற்றால், பூர்ணமான ஸ்தானத்தைப் பெறுவான். "அன்பினால் கிறிஸ்து என்பார் உங்களிடம் வசிப்பாராக!" † "என்னுடைய அருமையான குழந்தைகளே! உங்கள் உள்ளத்தில், கிறிஸ்து என்ற தத்துவம் உதயமாகி மலரும் வரை, நான்உங்களை நோக்கி உழைப்பேன்; வருந்துவேன்." ‡ "ஒரே மதக்கொள்கையில் நம்பினவராய், கடவுளின் புத்திரனின் ஞானம் பெற்றவராய், ஆகி, பூர்ணம்பெற்று, கிறிஸ்துபோன்று பூர்ணமான தகைமையை நம்மிடம் பெறும்வரையில்." ¶ இவைகள் போன்ற வாக்கியங்கள் விவிலிய நூலின் புதுஏற்பாடு என்னும்பாகத்தில் பல இடங்களில் காணலாம். ஹிந்துக்கள், இனி கல்கி அவதாரம் உண்டாகும் என்றும், ஜொராஸ்தர்கள் இனி ஸோஸியாஷ் (Sosiosh) என்பவர் தோன்றுவார் என்றும், பௌத்தர்கள், போதிசத்வா மைத்திரேயர் இனி வரப்போகின்றார் என்றும், கிறிஸ்துவர்கள், இந்தக்காலத்தை முடிப்பதற்கும் எல்லாவற்றையும் புதிப்பிக்கிறதற்கும் § கிறிஸ்து என்பார் உதயமாகப் போகிறார் என்றும் சொல்லுகிறார்கள். நாமங்களில் வித்தியாசம், வஸ்து ஒன்றே கருத்து ஒன்றே.

9. யூதர்களைப் போலவே, கிறிஸ்துவர்களும், ஈசுவரன் அருள் பெற்ற ஞானிகள், தீர்க்கதர்சிகள், பலதிரத்திலுள்ள முனிகள் இருந்திருக்கிறார்கள் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். உண்மையான ஆராய்ச்சியில், எல்லா மதத்திலும் இத்தன்மையான ஈசுவரப் பிரசாதம் பெற்றவர்கள் இருக்கின்றார்கள் என்பதே துணியப்படுகிறது.

10. ஈசுவரன் ஒவ்வொரு மனிதனாக சரீரம் பெற்றிருக்கின்றார் என்றும், கிறிஸ்துவர்கள் நம்புகிறார்கள். "உங்கள் சரீரங்கள்

* Athanasian Ceed.
† Ephesians iii-17.
‡ Galations iv-19.
¶ Ephesians iv-13.
§ Revelation xxi-5.

ஈசன் கோவில் என்று நீங்கள் அறிவீர்கள் அன்றோ? ஈசுவரனுன ஆத்மா உங்களிடம் வசிக்கிறார் என்று அறிவீர்களோ! " * இதனால், கிறிஸ்துவன், ஒவ்வொரு மனிதனையும் ஈசுவர அவதாரமென்றே கருதற்பாலன். "கிறிஸ்து என்பார் பல சகோதரர்களுள் ஜேஷ்டராவர்" என்றும் மதிக்கத்தக்கது. † இது கிறிஸ்து என்பாரின் உபதேசக் கட்டளையை உறுதிப்படுத்துகின்ற உயர்கலம் அமைந்த உண்மை. இவ்விதமின்றேல், அந்த உயர்ந்த நிலை, மனிதனுக்கு எட்டாததாக முடியும். "பரமபதத்தில் இருக்கின்ற பிதாவான கடவுள் எவ்வண்ணம் பூர்ணராக இருக்கின்றாரோ, அவ்வண்ணம் பூர்ணர்களாவீர்கள் ! " ‡ தேக அபிமானியான மனிதன், மனனொய்மையால் வருந்தி பல கஷ்டங்களுடனும் சோதனைகளுடனும் போராடிக்கொண்டிருந்த போதிலும், அவன் அவன் முயற்சிக்குத் தக்கவாறு உள்ளத்தில் இருக்கின்ற அந்தராத்மா பலத்தையும் சக்தியையும் அளிக்கிறான். "அவன் அவன் முயற்சியால் அவன் அவன் கடைத்தேறவேண்டும்; ரக்ஷிப்பைப் பெறவேண்டும். ஈசவரன் தம்முடைய மனோரதத்தை, இவ்விதமாக நிறைவேற்றுகிறார். ¶

ஒவ்வொரு ஜீவாத்மாவும் பரமாத்மாவே என்று உபதேசிக்கும் இவ்வசனங்களை சரியானபடி அர்த்தம்பண்ணி, அவைகளின் உயர்ந்த அபிப்பிராயங்களை, அநேக கிறிஸ்துவர்கள் அங்கீகரியார்; ஆயினும், இவர்கள்கூட, ஒவ்வொரு மனிதனும் சரீரம் என்ற கோசத்தில் அமர்ந்துள்ள நித்தியனான ஆத்மா என்றும், ஒவ்வொரு மனிதனிடமும் கடவுளான பரமாத்மா சரியாக இருக்கிறார் என்றும், மனிதன் நித்தியத்துவத்தைப் பெற சுதந்தரன் என்றும், நம்புகின்றார்கள்.

11- முகம்மதிய மதத்தில் அவதாரம் அல்லது கிறிஸ்து போன்றவர் வருதல் என்ற பேச்சே கிடையாது. முகம்மதியர் அது இல்லையென்றே வற்புறுத்தி மறுக்கிறார்கள். ஆனால்

---

* Corin. iii–16.
† Romans viii–89.
‡ St. Mathews v–48.
¶ Philippians ii- 12-13.

ஈசுவர அனுக்கிரகம் பெற்றவர், அருள்பெற்றவர், திர்க்கதர்சிகள் உளர் என்றும் அத்தகையர் எல்லாத் தேசங்களிலும் உளர் என்றும் அவர்கள் எல்லாராலும் நன்குமதித்துப் பூஜிக்கத் தக்கவர்களென்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். "அப்புண்ணிய புருஷர்களுள் வித்தியாசம் நாங்கள் செய்கிறதில்லை," என்பது அவர்களின் கொள்கை.

"ஒவ்வொரு மனிதனும் பரமாத்துமாவான ஈசுவரனின் அவதாரம்," என்ற விஷயத்தில், இஸ்லாம் (முகம்மதிய) மதத்திற்கும் பிராசீன மதங்களுக்கும் வித்தியாசம் இல்லை. முகம்மதியருள், ஸூபிஸ் என்னும் ஒரு வகுப்பார் உண்டு. அவர்கள் ஜீவாத்மா ஈசுவர அம்சமே என்பார்கள். ஆனால் மற்றைய முகம்மதியர்கள், ஜீவாத்மா ஈசுவரனிடமிருந்து வந்தது என்று ஒப்புக்கொண்டாலும் "ஈசுவரனும் ஜீவாத்மாவும் அபேதம்," என்பதை மறுப்பார்கள்.

12. தற்காலத்தில், மனிதன் பூர்ணம்பெறும் முறையில், வித்தியாசமான அபிப்பிராயங்கள் உள்ளன. பெரும்பாலர் முக்கியமாக கிறிஸ்துவர்களும், முகம்மதியரும், "புதிய புதிய ஜீவர்களை, புதிய புதிய சரீரங்களுக்குத் தக்கபடி, ஈசுவரன் நூதனமாக சிருஷ்டித்துக்கொண்டே உள்ளார்" என்கிறார்கள். பிராசீன மதங்க (இப்போது நடைபெறுகின்றவைகளும், முன் நடைபெற்று இப்போது மறைந்த மதங்களும்) ளின் அபிப்பிராயம் வேறு.

அதாவது பரமாத்துமாவான ஈசுவரன் பூமியில்விகாசமுறையில் தம்முடைய திவ்விய சக்திகளை மேன்மேலும் பல ஜீவர்கள்மூலமாய், வெளிப்படுத்திக்கொண்டு வருகிறார் என்றும், இடை இடையில் சூக்ஷ்மலோகங்களில், அஜ்ஜீவர்கள் சூக்ஷ்மசரீரங்களுடன் தங்கிவருகிறார்கள் என்றும், பூமியில் ஸ்தூலசரீரங்களில் இருத்தல், ஜீவாத்துமாக்கள் அனுபவம் பெறுதலுக்கென்றும், ஸ்தூலசரீரம் நீத்து, சூக்ஷ்மலோக சஞ்சாரம், முன் பூமியின்கண் ஜீவாத்மாக்கள் செய்த தீய கர்மபலன்களை அனுபவிக்கவும், புண்ணிய கர்மங்களின் பயனான நற்குணம் என்ற நல்ல ஸம்ஸ்காரங்களை அமைப்பப்பெறுதலுக்கென்றும், சித்தாந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மரணத்திற்குப்பின் நல்லகுணங்கள், என்ற நல்ல ஸம்ஸ்காரங்கள் சுவர்க்கலோ

கத்தில் ஏற்பட்டு, பின்பு மறு ஜன்மத்தில், பூமியில் ஜீவன் பிறக்கும்போது, அவைகள் நற்குலத்தின் கருக்களாக சிசுவினகண் அமைகின்றன. இவ்விதமான கொள்கைகள் கிறீஸ்துவர்களின் பூர்வ கிரந்தங்களிலும், முகம்மதியாகளின் மத்தியகால மதகிரந்தங்களிலும், பலவாறாக ஆராயப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டு மிருந்தனவாகத் தெரியவருகிறது. இக்கொள்கைகள் அறிவுக்கும் நீதிக்கும் பொருத்தமாக இருக்கின்றமையால், உலக வாழ்க்கையில் சம்பவிக்கும் உயர்வு தாழ்வு, கஷ்டநிஷ்டூரங்களையும், வெளிப்படையாகத் தோன்றும் அக்கிரமங்களையும், அநீதிகளையும், புத்திக்கும் நீதிக்கும் பொருந்தும்படியாக நேர்மையான சமாதானங்களைப் பயக்கக்கூடியவைகளாக இருக்கின்றமையாலும், எல்லாரும் கடைமுறையில் நலம்பெறுவார்கள் என்ற உறுதிப்பாட்டை வற்புறுத்துகின்றமையாலும், தற்காலத்தில், கிறீஸ்துவர்களும், முகம்மதியர்களும் திரும்பவும் இக்கொள்கைகளை அங்கிகரிக்க எத்தனித்திருப்பதாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு குழந்தை பிறக்கும்போது, ஓர் ஓர் நூதனஜீவன் சிருஷ்டிக்கப்பெறுகிறான் என்ற அபிப்பிராயம் சரியன்று என்றும், அவ்வபிப்பிராயம் கொண்டால், ஜீவாத்மாவுக்கு நித்தியத்துவம் பொய்த்துப்போகும் என்றும், தத்துவ ஆராய்ச்சியுள்ளவர்கள் கருதுகிறார்கள்.

13. பிராசீனமதத்தினர்கள், பூலோகத்திலும், புவர்முதலான லோகங்களிலும், ஜீவன் வரத்துப்போக்குள்ளவன் என்று, அதனால் ஜன்மாந்தரம் உண்டென்றும், சித்தாந்தம் உடையவர்கள் நவீன மதங்களை (கிறிஸ்துமதம், முகம்மதியமதம்) அனுசரிக்கிறவர்கள் இவ்வித சித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளுதலும், ஒப்பாதுமறுத்தலும், அவர் அவர் மதக்கிரந்தங்களை அர்த்தம் பண்ணுதலையும், அவர் அவர் புத்தியுக்தியையும் பொறுத்ததாக இருக்கின்றது. கி. பி. ஆறும் நூற்றாண்டு வரை, ஜன்மாந்தரம் உண்டு என்ற சித்தாந்தம், உலகத்தில் உள்ள எல்லாமதங்களிலும் அங்கிகரிக்கப்பட்டிருந்தது என்பது நிர்ச்சந்தேகமானது.

ப. நா. அன்னிபெஸண்டு.

408

# குண்டலினீ சக்தி.

408

## V.

1. இது சர்ப்பம் போன்ற அக்கினி. ஸ்தூலபிரஞ்ஞாபூமியில் வெளிப்பட்டுவரும் ஈசுவரனின் சக்திகளில் இஃது ஒன்றாம்: மின் சாரசக்தி (Electricity) மற்றொன்று; இஃது உஷ்ணம், ஒளி, சலநம், இவ்விதங்களான பரிணமங்களைப் பெறும். (2) ஈசுவரனின் வேறொரு சக்தி பிராணன். (3) ஆனால் இந்தப் பிராணன் என்ற சக்தியானது உஷ்ணம், ஒளி முதலியவைகளாகப் பரிணமிக்கிறதில்லை. மின்சார சக்தியும் பிராணனும் ஈசுவரனிடமிருந்து வரும் இரண்டு சக்திப்பிரவாகங்களின் ஒவ்வொன்றின் தனித்தனியான கீழ்க்கடையில் இருக்கின்ற சக்திகளாம். அம்மாதிரியாகவே குண்டலினீ சக்தியும் ஈசுவரனிடத்தினின்று வரும் வேறொரு சக்திப் பிரவாகத்தின் கீழ்க்கடையில் இருக்கின்றதாக வைத்துக்கொள்ளலாம். இச்சக்தி பிராணனைப்போலவே எல்லா பூமிகைகளிலும் (Planes) இருக்கின்றது. ஆனால் நாம பேசப்புகும் இச்சக்தியின் ஓர் பரிணமம் ஆகாச திரவியத்தை அவலம்பித்து நிகழும் பிராணனாகவும், மின்சாரமாகவும் இக்குண்டலினீ சக்தி பரிணமிக்கக்கூடியதன்று. இவைகளால் எவ்விதத்திலும் பாதிக்கப்படுகிறதும் இல்லை. உலகமாதா என்றும் அக்னிசக்திஎன்றும், அக்னிசர்ப்பமென்றும், சர்ப்பமென்றும், இது பெயர் பெறும். அக்னி வெள்ளம்போல சரீரத்தில் பிரவேசிக்கும் தன்மையால் அக்னிசக்தி என்றும், சர்ப்பம்போன்று வளைந்து நடமாடுகிறதினால், சர்ப்பம் என்றும் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன. இச்சக்தியால் ஸ்தூல, சூக்ஷ்ம, காரண உபாதிகள் உயிர்ப்பிக்கப்பட்டு, அந்தந்த உபாதிக்குரிய லோகங்களுடன் மனிதன் சம்பந்தம் பெறுகிறான்.

2. குண்டலினீ சக்தியானது மூலாதாரத்தின்கண் இருக்கிறதென்று முன்னமேயே தெரிவித்தோம். சாதாரண மனிதனிடத்தில் அது தூங்குகிறது. அது இருக்கிறதாகக்கூட அவன் அறியான். அப்படித் தூங்குதலும், அதன்யோக்கியதையை அவன் அறியாமல் இருத்தலும் அவனுக்கு நலமாம். அவன் சரியானபடி நற்குணப்பயிற்சி பெற்று உயர்நலம் அமைந்த நீதிமுறைபற்றி ஒழுகும் தகைமையை அடையும் வரையில், அச்சக்தியை எழுப்பாமல் தூங்

கும்படி விடுதலே நன்மையாகும். இதைப் பூர்ணமாய் அறிந்த குருவினிடமிருந்து வியக்தமான உபதேசமின்றி, இச்சக்தியைப்பற்றிய எவ்விதப் பரிக்ஷையையும் ஒழித்தல் வேண்டும். இப்பரிக்ஷையில் அநேக அபாயங்களும் துன்பங்களும் நேரிடும். வழிதப்பி அதனை எழுப்பினால் சகிக்கமுடியாத நோவுக்குள்ளாவான். அது கிளப்பிவிட்டதானால் அதை அடக்கமுடியாது, தாங்க இயலாது, அது பயங்கரமான கொடுமைகளைச் செய்யும். நாடி, நரம்பு, நிணங்களைச் சின்னபின்னப்படுத்தும். உயிருக்கும் அபாயம் நேரிடும். ஸ்தூலசரீரத்திற்குக் கெடுதல்கள் செய்கிறதுமன்றி, சூக்ஷ்மசரீரங்களுக்கும் ஸ்திரமான கேட்டையும் உண்டுபண்ணும். சரியான யோக்கியதையிலலாதவன் பக்குவகாலத்திற்கு முந்தி, இதை எழுப்புவானாகில் இச்சக்தி மேல்நோக்கிச்செல்லவேண்டியிருக்க, தீவிரமாய்க் கீழ்நோக்கிச் செல்லும். அவனிடம் உள்ள தீய பாவங்கள் தீய காமனைகள் அதிகரிக்கும்படி செய்யும். அவைகள் இவனைத் தாழ்த்தி அதோகதியில் தள்ளும். அவைகளுடன் இவனால் போராடமுடியாது. சமுத்திரத்தில் மகரமீன்வாய்க்கு எதிரில் நீந்துபவனைப் போன்று இவன் கதி ஏற்படும். இவன் காட்டிவிருக்கின்ற தூர்த்தேவதையாக ஏற்படுவான். மனத்தைத் தூய்மைப்படுத்தி நலமமைந்த தர்மமுறை நீதிமுறை பெறுனகின், இதைக் கிளப்பாமல், சும்மாவிருத்தலே நலம். நீதிமுறைப் பழக்கத்தினால் தன்னை வயத்தம் செய்துகொள்ளுமுன் அறிவின்மையினால் சக்தியை பரீக்ஷிப்பானாகில் இதனால் இவனுக்கு உண்டாகும் கேடுகளை விவரித்து முடியாது. வெடிமருந்தையும், நெருப்பையும் கையில் வைத்துக்கொண்டு விளையாடும் குழந்தையின் கதியை அடைவான். ஹடயோகப் பிரதீபிகையில், சொல்லியிருக்கிறபடி, இச்சக்தியானது யோகிக்கு முக்தியை அருளும், * மூடனை தன்வசப்படுத்திக் கொல்லும்.

---

* ஆமை ஒன்று ஏறி அகம்படியான் என,
ஓம என்றேறி எம்உள் ஒளியாய் நிற்கும்,
தாமநறுங்குழல் தையலைக் கண்டபின்
சோமநறுமலர் சூடிநின்றானே—திருமூலர்.

3. உலகத்திலுள்ள சக்திகளில் மகத்தான சக்தி இது. இது வெறும் வார்த்தை அன்று, இது உண்மையானது. இச்சக்தியோடு பழகுவதில் முன்னெச்சரிக்கையாக இருத்தற் பொருட்டு வற்புறுத்திச் சொல்லுகிறோம். இச்சக்தியை அடக்கலும், வசப்படுத்தலும் இலகுவானதன்று, மஹாகஷ்டமானது. தாக்ஷிண்யமின்றி ஆளைக் கொன்றுவிடும். இச்சக்தியை எழுப்பவேண்டுமென்று சொப்பனத்திலும் நினையாதே. நினைக்குமுன் காமனைகளை விட்டேனா என்றும், உலகப்பற்றுகள் அற்றவனா என்றும், தியாகம்பற்றியே ஒழுகுகிறேனாவென்றும், பிறர்நயம்பட ஒழுகுகிறவனா என்றும், சுயநயம் பாராட்டுதலை விட்டவனா என்றும், நீதிமுறையினின்று வழுவாது நடப்பவனா என்றும், பக்ஷபாதமில்லாமல் உன்னை ஆராய்ந்து பார். பின்பு இதன் உண்மையை அறிந்த குருவைத் தேடு. அவர் உபதேசத்தின் வழிநட. கண்ட குருவை நம்பி மோசம் போகாதே. சர்க்குரு ஒருவர் இருந்தால் போலிக்குருக்கள் ஆயிரம்பேர் ஆவர்.

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங்குருடுங் குருட்டாட்டமாடிக்
குருடுங்குருடுங் குழிவிழுமாறே."

4. குருவைப் போய் நீ தேடவேண்டுவது இல்லை. நற்குணமுள்ளவனாயிரு. நற்சீலமுள்ளவனாய் நட.

"சற்குணம், வாய்மை, தயா, விவேகந்தண்மை
சற்குருபாதமே சாயைபோனீங்காமே
சிற்பரஞானந் தெளியத்தெளிவோர்தல்
அற்புதமே தோன்றலாகுஞ் சற்சீடனே."

சரியான சிஷனைத் தேடி குரு வருவார். தெய்வசம்பத்தான சற்குணங்கள் நம்மிடம் அமையுமாகில், இச்சக்தி விசேஷத்தை அறியவும் அதை சுவாதீனப்படுத்தி ஆளவும், சற்குருவந்து நேரே உபதேசிப்பார். இது உண்மை.

ப. நா.

[Adapted from, Adyar talks.]

## பிரணவ உபாசனே.



கவி.

பொன்னுலகத்தினிற் புவியிலந்தரத்
தென்னுடையுட்புறத் திலங்குகின்றது
மன்னுசிற்சோதியே வடிவம்யாவுமாய்த்
துன்னுவதப்பொரு டொழுதிறைஞ்சுவாம்.

1. அன்பார்ந்த நண்பர்களே! பிரணவரூபமாகிற ஓங்காரஸ்வரூபத்தின் அகங்கிரகத்தியானம் மாண்டூக்கியாதி சுருதிகளை யனுசரித்துச் சுரேசுவராசாரியரால் சொல்லப்பட்டிருக்கிறது. அதை சுருக்கமாய் அதன்பிரகாரத்தைச் சொல்லுகிறேன். பிரணவாக்ஷரம் பிரஹ்மஸ்வரூபம். "அந்தப் பிரணவரூபப் பிரஹ்மம் நானென்று ஒருக்ஷணங்கூட விடாமல் புத்திவிர்த்தியைத்தரி." இதற்குச் சமானமான வேறுதியானமில்லே. இந்தத் தியானத்தின் விவரம் சுரேசுவராசாரியருடைய பஞ்சிகரணக் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தவுபாஸனையைச் செய்பவன் அபார சம்சாரத்தை யொழிக்கிருன்.

2. பிரணவவுபாஸனே அநேக உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டிருந்தாலும் மாண்டூக்கிய உபநிஷத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சங்கராசாரியரும் ஆனந்தகிரியும் அந்த உபநிஷத்தின் வியாக்கியானத்தில் உபாஸனையின் விவரத்தைத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிருர்கள். அந்த விவரம் வார்த்திகக்காரரால் பஞ்சிகரணக்கிரந்தத்தி லெழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் இந்தக் கிரந்தங்களைப் பார்க்க எவர்களுக்கு புத்திசாமர்த்தியமில்லேயோ அவர்களுக்காகப் பிரணவ உபாஸனையின் விவரம் நான் எழுதியிருக்கிறேன். உபநிஷத்தில் பிரணவ உபாஸனே இருவகையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று பரப்பிரஹ்மரூபமாகப் பிரணவத்தைச் சிந்தித்தல். மற்றொன்று அபரப்பிரஹ்மரூபமாகச் சிந்தித்தல். நிர்க்குணப்பிரஹ்மத்துக்குப்பரப்பிரஹ்மமென்றும். ஸகுணப்பிரஹ்மத்துக்கு அபரப்பிரஹ்மமென்றும் பெயர்.

அதில் பரப்பிரஹ்மரூபமாகப் பிரணவத்தைச் சிந்திக்கிறவன் மோக்ஷத்தையடைகிருன். அபரபிரஹ்மமாகப் பிரணவத்தைச் சிந்

தனை செய்கிறவன் பிரஹ்மலோகத்தையடைகிறான். இவ்விதமாக நிர்க்குண ஸகுணபேதங்களால் பிரணவ உபாஸனை இரண்டுவிதம். நிர்க்குண உபாஸனையின் விவரத்தை எழுதுகிறேன். ஸகுண உபாசனை விவரம் எழுதவில்லை. ஏனெனில் பிரஹ்மலோக இச்சையுள்ளவனுக்கு நிர்க்குண உபாஸனையிருனும் இச்சாரூபப் பிரதிபந்தத்தால் ஞானமூலமாக உடனே மோக்ஷமுண்டாகிறதில்லை. ஆனல் பிரஹ்மலோகமடையப்படுகிறது. அவ்விடத்தில் ஹிரண்யகர்ப்பனுடைய போகங்களுக்குச் சமானமான போகங்களை அனுபவித்து ஞானத்தைப்பெற்றுப்பின்புமோக்ஷத்தையடைகிறான். பிரஹ்மலோக இச்சையில்லாதவனுக்கு இந்தலோகத்திலேயே ஞானமுண்டாகி மோக்ஷம் ஸித்திக்கிறது. இவ்விதமாக ஸகுண உபாஸனையின் பலனும் நிர்க்குண உபாஸனையில் அந்தர்க்கதமாயிருக்கிறது. ஆகையால் நிர்க்குண உபாஸனையின் விவரஞ் சொல்லுகிறேன். எது காரண காரியவஸ்துவோ அது ஓங்கார ஸ்வரூபமாயிருக்கிறது. ஆனதால் சகல ரூபங்களும் ஓங்காரந்தான். சகலபதார்த்தங்களிலும், நாமம், ரூபம், என இரண்டு அம்சங்களுண்டு. அவைகளில் ரூபபாகம், அவ்வற்றின் நாம பாகத்தை விட்டு வேருகஇருக்கிறதில்லை, ஆனல் நாமஸ்வரூபமே ரூபபாகமாயிருக்கிறது. ஏனெனில் பதார்த்தத்தினுடைய ரூபம் அதாவது ஆகாரத்தின் பெயரால் அந்தப் பதார்த்தம் ஏகிக்கப்படுகிறது, அல்லது தள்ளப்படுகிறது. பெயர் அறியப்படாமல் கேவலம், ஆகாரத்தால் வியவகாரஞ் சித்திக்கிறதில்லை. ஆனதால் பெயரே முக்கியமானது ஆகாரமழிந்தாலும் பெயர் நிற்கிறது. கடம் நாசமடைந்தாலும் மண்மிச்சமாயிருக்கிறது. கடம் மண்ணைக் காட்டிலும் வேறன்று மண் ஸ்வரூபமாகவேயிருக்கிறது. இதுபோல் ஆகாரம் நாசமடைந்தாலும் மண்போல் மிஞ்சுகிறநாமத்தைக்காட்டிலும் ஆகாரம் வேருகாமல் நாமஸ்வரூபமாகவேயிருக்கிறது.மேலும் கடம், சட்டிபானை முதலியவைகளில் மண் அனுகதமாயிருக்கிறது.

3. கடாதிகள் பரஸ்பரம் வியபசரிக்கிறபடியால் கடாதிகள் பொய். அவைகளில் அனுகதமான மண் சத்தியம். இதுபோல் கடத்தின் ஆகாரம் அநேகம், அவைகளுக்கெல்லாம் "கடம்" என்கிற மூன்றெழுத்துக்களுடன் கூடிய பெயர் ஒன்றுயிருக்கிறது. ஒருகடத்

தின் ஆகாரம் மற்றென்றுக் கில்லாதபடியால் ஆகாரங்கள் வியபசரிக்கின்றன. எல்லாக் கடங்களினுகாரத்திலும் ஒரேபெயர் அநுகதமாயிருக்கிறது. ஆனதால் பொய்யான ஆகாரம் சத்தியமான பெயரைவிட்டு வேறாகவில்லே. இவ்விதமாக சகலபதார்த்தங்களி னுகாரமும் அவ்வவற்றி னுமத்தை விட்டு வேறாகஇல்லை. நாமஸ்வரூபமாகவே ஆகாரமிருக்கிறது. நாமங்களெல்லாம் ஓங்காரத்தைவிட வேறன்று. ஓங்காரஸ்வரூபமே நாமம். ஏனெனில் வாசகசப்தத்துக்கு நாமமென்று பெயர். உலகத்தில் வழங்குகிற சப்தங்கள் எல்லாம் ஓங்காரத்தினின்றுண்டாயின. காரியமெல்லாம் காரணஸ்வரூபமாகவேயிருக்கிறது. ஆனதால் ஓங்காரத்தின் காரியமான வாசக சப்தரூபநாமம் ஓங்காரஸ்வரூபமாயிருக்கிறது. இவ்விதமாக ரூபபாகமாகிற பதார்த்தத்தி னுகாரம் நாமஸ்வரூபமாயிருக்கிறது. நாமங்களெல்லாம் ஓங்காரஸ்வரூபம். ஆனதால் எல்லா ஸ்வரூபமும் ஓங்காரமே. எல்லா ஸ்வரூபமும் ஓங்காரமாயிருப்பதுபோல் எல்லாஸ்வரூபமும் பிரஹ்மமாயிருக்கிறது. ஆனதால் ஓங்காரம் பிரஹ்மரூபம். மேலும் ஓங்காரம் பிரஹ்மத்தின் வாசகம். பிரஹ்மம் வாச்சியம், வாசகத்துக்கும் வாச்சியத்துக்கும் அபேதமிருப்பதாலும், ஓங்காரம் பிரஹ்மரூபம். மேலும் விசாரித்துப் பார்த்தால் பிரஹ்மத்தில் அக்ஷரம் அத்தியஸ்தமாயிருக்கிறது. அதற்குப் பிரஹ்மம் அதிஷ்டானமாயிருக்கிறது. அத்தியஸ்தத்தின் ஸ்வரூபம் அதிஷ்டானத்துக்கு வேறன்று. ஆகையாலும் ஓங்காரம் பிரஹ்மஸ்வரூபமாயிருக்கிறது. ஆனதால் ஓங்காரத்தைப் பிரஹ்மரூபமாகச் சிந்தனை செய்யவேண்டியது. பிரஹ்மரூப ஓங்காரம் ஆத்மாவுக்கு வேறன்றெனச் சிந்தனை செய். ஏனெனில் ஆத்மாவுக்கும் பிரஹ்மத்துக்கும் பேதமில்லை. பிரஹ்மத்துக்கு நாலுபாதங்களுண்டு. அப்படியே ஆத்மாவுக்கும் நாலுபாதங்களுண்டு. பாதமென்றால் பாகம் அல்லது அம்சம். விராட்டு, ஹிரண்யகர்ப்பன், ஈசுவரன், தத்பதலக்ஷியமான ஈசுவரசாக்ஷி, இந்நான்கும் பிரஹ்மத்தின் பாதங்கள். விசுவன், தைஜஸன், பிராஞ்ஞன், துவம்பதலக்ஷியமான ஜீவசாக்ஷி இந்நான்கும் ஆத்மாவின்பாதங்களாம். ஜீவசாக்ஷிக்கே துரியமென்றும் பெயர். சகல பிராணிகளின் சரீரத்தில்: 'நான்' என்கிற அபிமானத்தைத் தருகிறதினுல் ஈசுவரன், "வைசுவானரன்." என்று சொல்லப்படுகிறுன். இந்த வைசு

வானரான் அநேக விதமாய் பிரகாசிக்கிறபடியால், விராட்டு என்று சொல்லப்படுகிறான்; சகல ஜீவர்களுக்கும் கர்மானுசாரமாய்ப் பலத்தைக்கொடுப்பதால்ஈசுவரன்என்றுபெயர்வந்தது. சூக்ஷ்மதேகத்தின் அபிமானத்தை விடாமல் ஸ்தூலதேகத்தில் "நான்" என்னும் அபிமானத்தை உடைத்தாயிருக்கிற, ஜாகிருதாபிமானியான ஜீவனுக்கு விசுவன் என்று பெயர். தேஜஸ், சப்தத்தின் வாச்சியுமான அந்தக்கரணத்தை விடாமல் பிராணேந்திரியங்களுடன் கூடியிருக்கிற ஸ்வப்னாபிமானியான ஜீவனுக்கு தைஜஸன் என்று பெயர். பிராஞ்ஞன், ஸுஷுப்தியில் ஸ்வப்பிரகாசமான ஆத்மாநந்தத்துடன் அஞ்ஞான விர்த்தி சேர்ந்திருப்பதால் ஸுஷுப்தி அபிமானி ஜீவனுக்கு பிராஞ்ஞன் என்றுபெயர்."

4. இனி விராட்டு விசுவங்களின் அபேதம்:—சமஷ்டி ஸ்தூலப்பிரபஞ்சசகித சேதனத்துக்கு விராட் என்று பெயர், வியஷ்டி ஸ்தூலஅபிமானிக்கு விசுவனென்று பெயர். விராட்டுக்கும் விசுவனுக்கும் உபாதிஸ்தூலமாயிருப்பதால் விசுவன் விராட்ரூபமே, விராட்டுக்கு வேறன்று. விராட்ரூப விசுவனுக்கு ஏழங்கங்களுண்டு. 1–சுவர்க்கலோகம் சிரசு. 2-சூரியன் நேத்திரம். 3-வாயு பிராணன். 4-ஆகாசம் மார்பு. 5-சமுத்திராதிரூபஜலம் மூத்திரஸ்தானம். 6-பிருதிவீ பாதம். 7-ஹோமம்பண்ணப்படுகிற அக்கினிமுகம். இவ்வேழும் விசுவனுடைய அங்கங்கள். மாண்டூக்கிய உபநிஷத்தில் சுவர்க்கலோகாதிகள் விசுவனுடைய அங்கங்களல்லவென்று சொல்லியிருந்தாலும், விராட்டின் அங்கங்களாயிருப்பதாலும், விராட்டு விசுவங்களுக்குப் பேதமில்லாததினாலும், விசுவனுடைய அங்கங்களாகச் சொல்லப்பட்டன; விராட்டு விசுவங்களின் 19 முகங்களாவன:—பிராணன்கள் 5. கர்மேந்திரியங்கள் 5. ஞானேந்திரியங்கள் 5. அந்தக்கரணம் 4. இந்தப்பத்தொன்பதும் முகங்கள்போல் போகத்துக்குச் சாதனமாயிருப்பதால் முகங்களென்று சொல்லப்படுகின்றன. ஜாக்கிரதாவஸ்தையில் இந்தப் பத்தொன்பது முகங்கள் மூலமாக ஸ்தூலசப்தாதிகள் பாஹியவிர்த்தியால் கிரகிக்கப்படுகின்றன. ஆனதால், விராட்ரூபவிசுவன் ஸ்தூல போக்தாவென்றும், பாஹியவிர்த்தி அதாவது பஹிர்ப்பிரஞ்ஞன் என்றும், ஜாக்கிரதாவஸ்தையுடன் கூடினவனென்றுஞ் சொல்லப்படுகிறான்:—

14-திரிபுடிகள்:—போகசாதனங்களான பிராணாதி 19 முகங்களில் சுரோத்திராதி பத்து இந்திரியங்களும் அந்தக்கரணம் நான்கும் கூடிய பதினான்கும் தங்கள் தங்கள் விஷயங்களையும் தங்கள் தங்கள் தேவதைகளின் சகாயத்தையும் அபேக்ஷிக்கின்றன. தேவதை விஷயம் இவைகளின் சகாயமன்றியில் கேவலம் இந்த 14 முகங்களால் மட்டும் போகமுண்டாகிறதில்லே. ஆனதால் பஞ்சப் பிராணன்களும், 14 திரிபுடிகளும் விராட்ரூபவிசுவனுடைய முகங்களாகச் சொல்லப்படுகின்றன. முகம், தேவதை, விஷயம் இம்மூன்றின் சமுதாயத்துக்குத் திரிபுடியென்று பெயர். இந்தத் திரிபுடியைச் சொல்லுகிறேன். சுரோத்திரேந்திரியம், அத்தியாத்மம் அதின்விஷயமாகிற சப்தம் அதிபூதம். திசையின் அபிமானி தேவதை, அதிதெய்வம். இவ்விடத்தில் கிரியாசக்தியுடனும் ஞானசக்தியுடனுங் கூடின இந்திரியமும் அந்தக்கரணமும் அத்தியாத்மமென்றும், இவைகளின விஷயம் அதிபூதமென்றும், இவைகளுக்குச் சகாயமானதேவதை அதிதெய்வமென்றுஞ் சொல்லப்படும். இதில் வார்த்திகக்கார சுரேசுவாசாரியார் பிருதிவியின் அபிமானி தேவதையைக் கிராணத்தின் அதிதெய்வமாகச் சொல்லியிருக்கிறார். அதுவும் சரியே. ஏனெனில் பிருதிவியினின்றும் கிராணம் உற்பத்தியாகிறது. ஆகையால் பிருதிவி அதிதெய்வமாகச் சொல்லப்பட்டது. மேலும் சூரியனுடைய குதிரையின் மூக்கினின்றும் அச்வினி குமாரர்களின் உற்பத்தி சொல்லப்பட்டிருப்பதால் மூக்கின் தேவதை அச்வினீகுமாரரென்று சிலர் சொல்லுகிறார்கள்.

இந்தப் பதினான்கு திரிபுடிகளும் ஐந்துபிராணன்களும் சேர்ந்து பத்தொன்பதும் விராட்ரூபவிசுவனுடைய முகங்களாம்.

5. விசுவன், விராட்டு, அகாரம், இவைகளின் அபேதசிந்தனை விராட்டுக்கும், விசுவனுக்கும் பேதமில்லாததுபோல் ஓங்காரத்தின் முதல் மாத்திரையாகிய அகாரத்துக்கும் விராட்ரூப விசுவத்துக்கும் பேதமில்லை. ஏனெனில் பிரஹ்மத்தின் நாலு பாதங்களில் முதற்பாதம் விராட்டு. ஆத்மாவின் நாலுபாதங்களில் முதலாவது விசுவன், ஓங்காரத்தின் நான்கு மாத்திரைகளாகிற பாதங்களில் முதற்பாதம் அகாரம். ஆகையால் முதலாவதாயிருந்தால் இவைகளு

க்குச்சமான தர்மமாயிருப்பதால் விசுவன் விராட்டு அகாரம் இம்மூன்றையும் அபேதமாய்ச் சிந்திக்கவேண்டும்:—விசுவதைஜஸ பேதாபேதம்:—விசுவனுக்குச் சொல்லப்பட்ட ஏழு அங்கங்களும் பத்தொன்பது முகங்களும் தைஜஸனுக்கு இருப்பதாக அறியவேண்டியது. ஆனால் பேதமென்னவெனில் விசுவனுடைய அங்கங்களும் முகங்களும் ஈசுவரனால் செய்யப்பட்டிருக்கின்றனர். தைஜஸனுடைய இந்திரியதேவதை விஷயரூபத்திரிபுடிகளும் சிரசுமுதலிய அங்கங்களும் மனோமயமா யிருக்கின்றன. தைஜஸனுடைய போகம் சூக்ஷமம். போகமென்றால் சுகதுக்கங்களின் ஞானம். அதனிடத்தில் ஸ்தூலசூக்ஷமத்தன்மைகள் சொல்வது சரியன்று. ஆயினும் பாஹிய சப்தாதிகளின் சம்பந்தத்தால் சாக்ஷாத்தாக உண்டாகிற சுகதுக்கம் ஸ்தூலமென்றும் மானஸிக சப்தாதிகளின் சம்பந்தத்தாலுண்டாகும் சுகதுக்கம் சூக்ஷமமென்றுஞ் சொல்லப்படும். இந்தக் காரணத்தால் விசுவன் ஸ்தூலத்தில் போக்தாவென்றும், தைஜஸன் சூக்ஷமத்தின் போக்தாவென்றும், சுருதியிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் தைஜஸனுடைய போகத்துக்கு போக்கியமான சப்தாதிகள் மானஸிகமாயிருப்பதால் சூக்ஷமமாயிருக்கின்றன. இவைகளை அபேக்ஷித்து விசுவனுடைய போகத்துக்கு யோக்கியமான பாஹிய சப்தாதிகள் ஸ்தூலமாயிருக்கின்றன. மேலும் விசுவன் பகிர்ப்பிரஞ்ஞன். தைஜஸன் அந்தர்ப்பிரஞ்ஞன் ஏனெனில் விசுவனுடைய அந்தக்கரணத்தின் விர்த்திரூபப்பிரஞ்ஞை வெளியே போகிறது. தைஜஸனுடைய பிரஞ்ஞை போகிறதில்லை.

6. தைஜஸ ஹிரண்யகர்ப்ப உகாரங்களின் அபேத சிந்தனை விசுவனுக்கும் விராட்டுக்கும் அபேதமிருப்பதுபோல் தைஜஸனையும் ஹிரண்யகர்ப்ப ரூபமாய் அறி. ஏனெனில் தைஜஸனுடைய உபாதி சூக்ஷமம் ஹிரண்யகர்ப்பனுடை உபாதியும் அப்படியே ஆகையால் இவ்விரண்டையும் ஒன்றாக அறி. தைஜஸஹிரண்யகர்ப்பங்கள் ஒன்றென அறிந்து ஓங்காரத்தின் இரண்டாவது மாத்திரையான உகாரத்துக்கும் இவைகளுக்கும் பேதமில்லையென்று சிந்தனை செய்யவேண்டும். ஏனெனில் ஆத்மாவின்

நாலுபாதங்களில் இரண்டாவது பாதம் தைஜஸன். பிரம்மத்தின் இரண்டாவது பாதம் ஹிரண்யகர்ப்பன். ஓங்காரத்தின் மாத்திரைகளில் இரண்டாவது மாத்திரை உகாரம். இரண்டாவதாக இருப்பது மூன்றுக்கும் சமான தர்மமாயிருக்கிறது. ஆகையால் மூன்றையும் ஒன்றாகச் சிந்தனைசெய். அபேதம்:-பிராஞ்ஞ ஈசுவர மகாரங்களின்பிராஞ்ஞனை ஈசுவர ரூபமாக அறி. ஏனெனில் பிராஞ்ஞனுடைய,உபாதி,காரணம்,ஈசுவரனுடைய உபாதியும்காரணமுமே. ஈசுவரனும் பிராஞ்ஞனும் மூன்றாவது பாதங்கள். ஓங்காரத்தின் மூன்றாவது மாத்திரை மகாரம். இம்மூன்றிலும் மூன்றாவதாயிருப்பது சமான தர்மமாயிருப்பதால் இம்மூன்றையும் ஒன்றாக அறியவேண்டியது. இந்தப் பிராஞ்ஞன் பிரஞ்ஞானகனமாயிருக்கிறான். ஏனெனில்ஜாக்கிரதஸ்வப்னங்களிலிருக்கிற ஞானம்,ஸுஷுப்தியில்கனம் அதாவது ஒரே அவித்தியா ரூபமாக ஆய்விடுகிறது. ஆகையால் பிரஞ்ஞானகனமென்று சொல்லப்படுகிறது. மேலும் இந்தப் பிராஞ்ஞன் ஆனந்தபுக்கென்றும் சுருதியிற்சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில், அவித்யையினலாவிருதமான ஆனந்தத்தையிந்தப் பிராஞ்ஞன் புஜிக்கிறான். ஆகையால்ஆனந்தபுக்கென்றுசொல்லப்படுகிறான்.தைஜஸன் விசுவன் இவர்களுடைய போகம் திரிபுடியாலுண்டாகிறது போல்,பிராஞ்ஞனுடைய போகத்துக்கும் திரிபுடியுண்டெனச் சொல்லப்படுகிறது. சேதனத்தின் பிரதிபிம்ப சகிதமான அவித்தியா விர்த்தி அத்தியாத்மம். அஞ்ஞானத்தாலாவிருதமான ஸ்வரூபானந்தம் அதிபூதம். ஈசுவரன் அதிதெய்வம். இவ்விதமாக விசுவன் பகிர்ப் பிரஞ்ஞனாயிருக்கிறான். தைஜஸன் அந்தர்ப் பிரஞ்ஞனாயிருக்கிறான். பிராஞ்ஞன் பிரஞ்ஞானகனனாய் இருக்கிறான். இவ்விதமாக விசுவாதி மூன்றுக்கும் சொன்ன பேதம் உபாதியால் உண்டாகிறது. விசுவனுக்கும் ஸ்தூலசூக்ஷ்ம அஞ்ஞானங்களாகிற மூன்று உபாதிகள். தைஜஸனுக்கு சூக்ஷ்ம அஞ்ஞானங்களாகிற இரண்டு உபாதிகள். பிராஞ்ஞனுக்கு அஞ்ஞானமாகிற ஒரே உபாதியாம். உபாதிகளின் ஏற்றக் குறைவால் மூன்றுக்கும் பேதமுண்டாகிறதே தவிர உண்மையில் ஸ்வரூபத்தால் பேதமில்லை. விசுவன்,தைஜஸன்,பிராஞ்ஞன் இவைகளில் அனுகதமான சேதனம்

பாரமார்த்திகத்தில் மூன்று உபாதிகளின் சம்பந்தமுமின்றி யிருக்கிறது. மூன்று உபாதிகளின் அதிஷ்டானம் துரியம். இது பகிர்ப்பிரஞ்ஞனன்று, அந்தர்ப் பிரஞ்ஞனன்று, பிரஞ்ஞானகனமுமன்று, கர்மேந்திரியத்துக்கும் ஞானேந்திரியத்துக்கும் விஷயமன்று, புத்திக்கு விஷயமன்று, எந்தச் சப்தத்துக்கும் விஷயமன்று, இப்படியிருக்கிற துரியத்தைப் பரமாத்மாவின் நான்காவது பாதமாகிற ஈசுவர சாக்ஷியாக சுத்தப்பிரஹ்ம ரூபமாக அறி. இவ்விதமாக ஆத்மாவுக்கு இரண்டுவித ஸ்வரூபங்கள் சொல்லப்பட்டன. ஒன்று பரமார்த்த ரூபம். மற்றொன்று அபரமார்த்தரூபம். மேற்சொல்லிய மூன்று பாதங்கள் அபரமார்த்த ரூபம். ஒரு பாதமாகிய துரியம் பரமார்த்த ரூபம். இப்படி ஆத்மாவுக்கு இரண்டு ஸ்வரூபங்கள் இருப்பது போல், ஓங்காரத்துக்கும் இரண்டு ஸ்வரூபங்களுண்டு. அகார உகார மகாரங்களாகிய மூன்றுமாத்திராரூப அக்ஷரங்கள் அபரமார்த்தரூபம். மூன்று மாத்திரைகளில் வியாபித்திருக்கிற அஸ்தி பாதி பிரியரூப அதிஷ்டான சேதனம் பரமார்த்தரூபம். ஓங்காரத்தின் பரமார்த்த ரூபம் சுருதியில் அமாத்திரை என்ற சப்தத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் பரமார்த்த ஸ்வரூபத்தில் மாத்திரைகளின் வியாபகமில்லை, ஆனதால் அமாத்திரையென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக இரண்டு ஸ்வரூபங்களுடன்கூடிய ஓங்காரத்துக்கும் இரண்டு ஸ்வரூபங்களுடன் கூடிய ஆத்மாவுக்கும் உள்ள அபேதத்தைத் தெரியவேண்டியது.

7. வியஷ்டி, ஸமஷ்டி ஸ்தூலப்பிரபஞ்சத்துடன் கூடிய விசுவன் விராட்டு இவைகளுக்கும், அகாரத்துக்குமுள்ள அபேதத்தை யறியவேண்டியது. ஆத்மாவினுடைய பாதங்களில் விசுவன் முதலாவது. ஓங்காரத்தின் மாத்திரைகளில் அகாரம் முதலாவது. ஆனதால் இரண்டையும் ஒன்றாக அறியவேண்டியது. சூக்ஷ்மப்பிரபஞ்ச சகிதமான ஹிரண்யகர்ப்பரூபத் தைஜஸனை உகாரரூபமாக அறியவேண்டியது. தைஜஸன் ஆத்மாவின் பாதங்களில் இரண்டாவது. ஓங்காரத்தின் மாத்திரைகளில் உகாரம் இரண்டாவது. ஆனதால் இரண்டையும் ஒன்றாக அறியவேண்டியது. காரண உபாதிசகிதமான ஈசுவரரூபப் பிராஞ்ஞனை மகார ரூபமாக அறியவேண்டியது. ஈஸ்வர ரூபப்பிராஞ்ஞன் மூன்றாவதாக இருப்பதுபோல், மகாரமும்மூன்

றாவதாக இருப்பதால் இரண்டையும் ஒன்றாக அறியவேண்டியது. இவைகளில் அனுகதமான பரமார்த்த ரூபமாகிய துரியத்தை, ஓங்காரத்தின் மூன்றுமாத்திரைகளில், அனுகதமான ஓங்காரத்தின்பரமார்த்த ரூபமாகிய அமாத்திரைக்கு வேறாகாததாக அறியவேண்டியது. விசுவாதிகளில் துரியம் அனுகதமாயிருப்பதுபோல், அகாராதிமூன்று மாத்திரைகளில் அமாத்திரை அனுகதமாயிருக்கிறது. ஆனதால் ஓங்காரத்தின் அமாத்திரை பேதத்தையும் துரியத்தையும் ஒன்றாக அறி. இவ்விதமாக ஆத்மாவின் பாதத்தையும் ஓங்காரத்தின் மாத்திரையையும் ஒன்றாக அறிந்து லயசிந்தனை செய்யவேண்டியது.

[இன்னும் வரும்.]

நடேசஸ்வாமி.

---

## நன்மொழி.

---

76. வெளியிலுள்ள ஆரவாரத்தைக் கவனியாமல், உள்நோக்கிப் புகுமின், உயர்நலம் பேசும் உண்மையை அறிமின்.

77. உன்னைவிட மேலாயினோர் இருக்கிறார்களென்று சிந்தனைகொள். அதனால் உயர்நலம் பேறுவாய். அச்சிந்தனை தடிக்கத் தடிக்க, உயர்நலம் பெருகும்.

78. பிறரை மதித்தலும், உடல் பொருள் ஆவி மூன்றையும் அவருக்குஅர்ப்பணம் செய்தலும், நம்மைக் குறைவு படுத்தல் அன்று, நம்மை அடிமையாக்கலுமின்று. இத்தகைய ஒழுக்கம் உயர்நலம் அமைந்த மனோநிலைமையை உணர்த்துகின்றது.

79. பிறரைப் பற்றி விரோத மாகநினைப்புக் கொள்ளாதே அதற்குப்போதுமான காரணமிருந்தும், மறைத்தலினால் பாவம் நேரிடாவிடத்து, அன்நினைப்பை உரையிடாதே.

80. பிறர் குற்றம் கண்டு பொறுமைகொள். அக்குற்றம் ஒரு காலத்தில் நீயும் செய்திருப்பாய் அன்றோ? பிறர் மனம் நோக நீ பேசாதே. அவர் நோதலின் உன் துன்பம் விளையும்.

## புத்தகவரவு.

—:o:—

At the feet of the master:— ஸத்குருபாதங்களில், இக்காமதேயமுள்ள உபதேசநூல் ஆங்கிலத்தில் சென்ற டிசம்பர்மீ வெளிவந்தது. இது பிரும்மஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திகளுக்கு தம்முடைய குருநாதனால் அருளப்பெற்ற ஞானமுறை. சன்மார்க்கதீபம் (The light on the path) என்ற நூலும், மௌனம் கடந்த நாதம் (The voice of the silence) என்றநூலும், இந்நூலும், ஞானமுறையில் நடைபெற முயலுகிற சத்சீஷனுக்கு மிகவும் பயன்படும்ஞானசாதனநூல்கள். இந்நூல் மகா-ள-ள-ஸ்ரீ டி. எஸ். லெக்ஷ்மிநாராயணஅய்யர் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. யாவருக்கும் அர்த்தமாகும்படியாக எளிய தமிழ் நடையில் உள்ளது. இதன் விலை 8 அணா தான். வேண்டுவோர் சென்னை அடையாற்றின் கண்ணுள்ள தியாசபிஸ்டு ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**துவாதசோபநிஷத்—பன்னிரண்டு உபநிஷத்துக்கள்:**—ஈச, கேந, கட, பிரச்ந, முண்டக, மாண்டூக்ய, தைத்திரீய, ஐதரேய, சாந்தோக்ய, பிருஹதாரண்யக, சுவேதா, சுவதர, நிருஸிம்ஹதாபினீய உபநிஷத்துக்கள், காலஞ்சென்ற பிரஹ்மஸ்ரீ நாகை சுப்பிரமணிய அய்யர் அவர்களால் ஸ்ரீமத் சங்கரபாஷ்யத்திற்கு இணங்க, தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளன. அவைகளை, இப்போதுஷெயார் குமாரர், N. S. இராஜாராம அய்யர் அவர்கள் அச்சியற்றி பிரவசித்தம் செய்ய உத்தேசித்துள்ளார். இப்போது ஐதரேய, தைத்திரிய, கட, சுவேதாசுவதர உபநிஷத்துக்கள், முதல்பாகமாக வெளிவந்திருக்கின்றன. இம்மொழி பெயர்ப்பு, ஸம்ஸ்கிருதம் தெரியாதார்க்கு மிகவும் பயன்படும். யாவரும் எளிதில் வாசித்துக் கிரகிக்கும்படியாக இலகுவான செந்தமிழ் நடையில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை ரூ 1. யாவரும் வாங்கும்படியாக, இதன் விலையை சொற்பம் குறைக்கலாம். வேண்டுவோர் சிதம்பரம், விநாயக சுந்தரவிலாசம் பிரஸ் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**பரத்தையர் கேண்மை விலக்கு:**—கோயமுத்தூர் சி. கு. நாராயணசாமி முதலியாரால் இயற்றப்பட்ட சிறுநூல் இது. "மைவிழியார் மனையகல்" என்ற ஔவையாரின் அருமையான உபதேசத்தைத் தலைமேற்கொண்டு அப்பரத்தையர் நட்பினால் விளையும் துன்பங்களையும் பாதகங்களையும் விரித்துக்காட்டி, நம்மவர் அவர்களின் மோச விலாசங்களில் ஈடுபடாமல், நன்னெறிபற்றி ஒழுகி நலம்பெறவேண்டும் என்பதே இப்புத்தகத்தின் பிரார்த்தனை. இப்பரத்தையர்களான வேசிகள் வேறு என்றும், தேவாலயங்களில் தொண்டு செய்வதற்காக ஆகமங்களில் ஏற்பட்டுள்ள உருத்திர கணிகையர்கள் வேறு என்றும் போதுமான பிரமாணங்களுடனே இப் புத்தகத்தின்கண் தெளிவாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வேசிகளைத் தாசி என்ற வார்த்தையால் பேசுவது பிழையாம். பாபருமாம். இந்த உருத்திர கணிகையர், ரோமான் காதலிக் கோவில்களிலிருக்கின்ற துறவிகளான நன்ஸ் (Nuns) போன்றவர்கள். குணசீலர்கள், உண்மையான சந்நியாஸினிகள், பிரஹ்மவாதினிகள், பௌத்தமதத்தில் பிரஸ்தாபிக்கப்பெறும் பிக்ஷுணிகளின் தன்மையராவர். அவர்கள் எப்போதும் பெரும்பாலும் கன்னிகைகளாகவே ஆயுள்காலம் முழுமையும்கழித்தார்கள். ஆகம சாஸ்திரத்தின் சில உண்மைகளை இவர்கள் மூலமாகத் தெளிவுபடுத்தவே, இந்த உருத்திர கன்னிகைகளின் நியமநம் ஆதிகாலத்தில் நேர்மையாக நடைபெற்றுவந்த தேவாலயங்களுக்கு ஏற்பட்டது. இதைப்பற்றி வேறுஒரு சமயத்தில் எழுதுவோம். இப்புத்தகம் நன்றாய் எளியநடையாக நடைபெறுகிறது. இதன்விலை அணா 4 தான்.

பத்திராதிபர்.

---

## சமாசாரம்.

**90நாள் அன்னம் ஆகாரம் இல்லாமல் இருந்தல்:**—அமெரிக்காவில் வட டகோடா (N. Dakota) என்னும் ஊரில் பௌசல் என்பார், 90 நாள் அன்னம் உட்கொள்ளாமல் இருந்தார். அவர் ஸ்தூலமான தேகமுடையவர். அவர் தேகம் 385 பவுன் நிறையுள்ளது. முதலில் 40 நாள் பட்டினியாக இருந்தார். அதனால் அவர் தேகம் 130 பவுன் நிறையுள்ளதாகக் குறைந்தது. தேகம் மெலிந்துபோனாலும், புத்திமுதலியது இருக்கிறதாம் மேற்கண்டவர், சரீரத்தில், அதிகக் கொழுப்பினால், அதிக உணவு பொக்கிஷமாக ஏற்கனவே சேகரிக்கப்பட்டமையால், பட்டினியாக இருந்தகாலத்தில், சரீரத்திலுள்ள கருவிகரணங்கள் தொழில் செய்வதற்கு அவ் உணவு உபயோகமாக இருந்திருக்கின்றது. சாந்தோக்கிய உபநிஷத்தில் (6-ம் பிரபாடகம் 7-ம் அத்தியாயம்.) சொல்லியிருக்கிறதாவது—"மனிதன் 16 கலையுள்ள புருஷன். 15 நாள் அன்னமில்லாமல் ஜலத்தைமாத்திரம் பானம்பண்ணிக்கொண்டிருக்கலாம். உயிர் நீங்காது. பிராணன் ஜலத்தால் உள்ளது. ஆனால், மனச்சக்தி சோர்வடையும். ஸ்மரணை குன்றும்." அணைந்த அக்கினியில் ஒரு பொறி இருக்குமாகில், பின்பு விறகு போடுவதனால், எவ்வித பெரிய ஜ்வாலை உண்டாகுமோ அவ்விதமே மறுபடியும் அன்னம் உட்கொள்ள ஸ்மரணையும்உண்டாகும், மனச்சக்திகள் முன்போல்ஏற்படும்.

**கோழி முட்டை வேந்தது, வேகாத பச்சை,** இவைஇரண்டும் பார்வையில் வித்தியாசம்தோன்று. உடைக்காமல் இது வெந்தது, இதுவேகாதது என அடியிற்கண்ட முறையால் கண்டுபிடித்தல்கூடும். வெந்ததைச்சுழற்றினால் சுழலும், சுழலும்போது, தொட்டால் சுழல் அடங்கி நின்றுவிடும். உள்ளே உள்ள மஞ்சள், வெள்ளைக் கருக்கள் ஒரேகட்டியாகி விடுகின்றன.

முட்டை முழுமையும் ஒருங்கே சுழலும். வேகாததைச் சுழற்றினல், சுழலும். தொட்டால் சுழல் அடங்காமல், அது தொடர்பாய் இன்னும் சுழலும். இதற்குக் காரணம். வெளிச்சுழற்சியானது, தொட்டமாத்திரத்தில், மேல்ஓட்டைப் பற்றியதினல், அவ்வோடு சம்பந்தமட்டில் நிற்கும். ஆனல், உள்ளே இருக்கின்ற கருக்கள் ஜலத்தன்மையனவாக இருக்கின்றமையால், அவைகளுடைய சுழற்சி நிற்காமல் நிகழ்கின்றது. அச் சுழற்சி, வெளிஓட்டுடன் சம்பந்திக்கின்றமையால், தொட்டாலும், பச்சை முட்டை சுழன்று கொண்டே இருந்து தானும் பின்பு சக்திகுன்ற நிற்கும். தட்டாமாலே ஆடினவனைப் பிடித்துவிட்டால் முன் சுழற்சியின் வேகத்தால் மறுபடியும் கொஞ்சநேரம் சுழலுவான். அதுபோலும் என்று அறிக.

**நாகபட்டணத்திலுள்ள சுந்தர பிரஹ்மஞானக்** கிளைச்சபைக்கு, சொந்தமான கிருகம் ஒன்று அமைந்திருக்கின்றது. இவ்விஷயத்தில் பிரஹ்ம ஸ்ரீ கெ. நாராயணஸ்வாமி அய்யர், எஸ். ஸ்ரீனிவாச அய்யர், ஜி. சாம்பசிவ அய்யர் இவர்களின் நன்முயற்சி மிகவும் மதிக்கத்தக்கது.

கும்பகோணத்தில் **சத்ய விரத சங்கம்** என்ற பெயருள்ள, இந்திய புத்திரர்களின் சங்கம் ஒன்று உள்ளது. சென்ற மஹாமக காலத்தில் அச் சங்கத்தினர்கள், பெரிய ஜனக்கூட்டத்திற்கு பலவிதமான சாதகங்கள் செய்தார்கள். இப்போது சென்றமீ 19உயில், மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையாருக்கு ஒரு நல்வரவுப் பத்திரிகை படித்தார்கள். ஷை அம்மையார் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஜனசமூகத்திற்கு தத்தம் செய்துவரும் சீலத்தை புகழ்ந்து சொல்லி, அம்முறையில் தாமும்ஒழுக முயல்வதாக அப்பத்திரிகையின்கண் பிரஸ்தாபித்திருந்தது.

**பலமதங்களின்கூட்டுறவு:**—பிரயாகை என்ற அலகபாத் நகரத்தில், சென்ற ஜனவரிமீ 10உயில், நம்தேசத்தில் நடைபெறும் பல மதஸ்தர்கள், மதங்களுக்குள் அந்நியோந்நியமும் நேர்மையும் நிகழவேணுமென்ற கருத்தைப் பரவச்செய்ய ஒரு மஹாசபை கூடினர்கள். தர்பங்கர் மஹாராஜா அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். ஆண்டிருபாதரியார், கடவுள் ஸ்தோத்திரம் ஒன்றை எழுதி வாசித்தார். அதன் பின்னர், அலஹபாத் ஹைக்கோர்ட்டு ஜட்ஜு **ஸர் ஜார்ஜு நாக்ஸ்** என்பார் சபையார்கள் நல்வரவைப்பற்றிய ஒரு உபந்நியாசம் செய்தார். அதின்சில முக்கியமானவிஷயங்கள் அடியில் வருவன:—சகல ஜனங்களின் பிதாவாகிய ஈசுவரன், பெயரை முன்னர் வைத்துக்கொண்டு தங்கள் நல்வரவை மனங்குளிர விரும்புகிறேன். நாமெல்லாரும் அன்பு என்ற பொதுவான தர்மத்தை நாடி இச் சபையில் கூடியிருக்கின்றோம். மதங்களுக்குள்ளிருக்கின்ற, வேற்றுமையையும் அதினலுண்டாகும் துவேஷபுத்தியையும் தவிர்க்கவும், சிநேகபாவத்

தை விர்த்திசெய்யவும் நாம் கூடியிருக்கின்றோம். ஜனஸமூகம் ஒன்றே குலம், "ஒருவனே தேவன்," என, ஒரே மனத்தினராய் எல்லோரும் கை கூப்பி ஈசுவரனை ஆராதிக்கவேண்டுமென்பதே நம்கருத்து.

நம்மை அறிவதுடனே நம்அயலாரை அறிதலும் இன்றியமையாத தர்மமே. அதுதான் நாம் எதிர்பார்க்கும் சிநேகநிகழ்ச்சியில் முதற்படி. இத்துடன் நிற்றல் போதாது. நம்முடைய சங்கற்பமும் அதன் அனுஷ்டான முயற்சி இன்னும் அதிகமாகவேண்டும். நாம் எல்லாரும் பிரகிருதிமாத்திரமல்லர். நம்முடைய பூர்வ வமிசாவளிமுறையை பின்னோக்கி ஆராய்ச்சி செய்வோமானால், ஈசுவரன் வரை சம்பந்தம் உண்டாம். ஈசுவரனே நமக்குப் பிராணகலையை அளித்தார். அவரைப்போலவே நம்மை உண்டாக்கினர். அவரால் நாம் ஜீவிக்கின்றோம். இவ்விதம் கிறிஸ்துமதம் உபதேசித்துள்ளது. இவ்விதமே ரிக்வேதமும் உபதேசிக்கிறது. இவ்விதமே கிரேக் மத கிரந்தங்களும் கூறுகின்றன. கோரானிலும் இவ்விதமே. ஜனங்கள் எல்லோரும் ஒரு பெரிய சகோதரக்கூட்டம். கடவுள் சிருஷ்டிகர்த்தர். அவரே, எஜமானன். ஜனங்கள் எல்லாம் அவர்முன்னர் சமானமானவர்கள். பின்பு மதங்களுக்குள் நிகழும் வேற்றுமைகளுக்குக் காரணத்தைப்பற்றி சற்று பேசி உபந்நியாசத்தை முடித்தார்.

பங்களூரில் சங்கபுரம் என்னும் தெருவில் ஒரு உயர்தர ஸமஸ்கிருத வித்தியாசாலையானது, சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களால் சமீபத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கிறது. அதில், பூர்வமீமாம்ஸை, தர்க்கம், வேதாந்தம், முதலிய தர்சனங்களும் காவியமும் வித்தியார்த்திகளுக்குத் தற்காலத்தில் கற்பிக்கப்படும். இப்போது ரென்கு வித்தியார்த்திகள் அதில் சேர்ந்துள்ளார். இவ்வித்தியாசாலையின் முக்கியமான நோக்கம் என்னவென்றால், ஆரியமதமான, சநாதநதர்மத்தைப் பற்றி உபந்நியாசம் செய்வதற்காகச், சிலர்களைப் பயிற்சிப்பிக்க வேண்டுமென்பதுதான். இவ்வித்தியாசாலையில் நன்றாய்க் கற்றுத் தெரிந்து தேர்ந்தவர்கள் உபந்நியாசம் செய்வதற்குப் பலஇடங்களுக்கு அனுப்பப்படுவார்கள். மடாதிபதிகள் இத்தகைய காரியத்தை இப்போதாவது செய்ய ஆரம்பித்திருக்கின்றார்களென கேள்வியுற மிகவும் சந்தோஷிக்கிறோம். இதுதான் அவர்களின் கடமை. இக்கருத்தைக்கொண்டே, சமயாசாரியர்கள் மடங்களைப் பல இடங்களில், ஸ்தாபித்தார்கள். இத்தன்மையான கல்லூரிகள் பல இடங்களிலும் ஏற்படுமாகில், ஆரியமதம் முன்போலத் தழைத்து ஓங்கி எங்கும் பரவும், ஜனங்களின் மனத்தை மூடிக்கொண்டிருக்கும் இருளைப் போக்கும். நம்தேசம் நலம்பெறும். இப்பாடசாலைகள் உண்மையான உயர்

தரக்கல்விச்சாலைகளாக அமையவேண்டுமென ஈசுவரனைப் பிரார்த்திக்கின்றோம். ஆதி ஆசாரியர்களின் அநுக்கிரகம் பூர்ணமாக இருக்கவேண்டும். இப்பாடசாலை ஸ்தாபித்தலில் ஸ்ரீமான் மாதவராவ் C. I. E. அவர்கள் நன்முயற்சி எடுத்துக்கொண்டார்கள். உத்தியோகங்களைப் பல செய்து, பின்பு பென்ஷன் பெற்றவர்கள் இத்தன்மையான ஜன உபகாரமாகக் கைங்கரியம் செய்தலே அழகு, உயர்ந்த குணத்தைக் காட்டுகிறது. நம்முயற்சியால் உண்டாயிருக்கின்ற இப்பாடசாலையைக் கண்ணும் கருத்துமாக மேன்மையும் உயர்நலமும் பெறும்படியாக மகா-ா-ா-ஸ்ரீ மாதரவாயர் அவர்கள் இன்னும் அதிக கவனம் செலுத்திவரவும், அவர்கள் தீர்க்க ஆயுஸ்பெறவும் இறைவன் அருள்புரிவாராக.

**பிரஹ்மஞானமடம்:**—ஸ்ரீமாந் பெருமாள் பிள்ளையின் நன்முயற்சியின் பேரில் நாகர்கோவிலுக்குச் சமீபத்தில் உள்ள சுசீந்தரம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்திற்கு அருகாண்மையில் பரக்கை என்னும் கிராமத்தில் ஒரு வேதாந்த சிரவணமடம் ஏற்பட்டிருக்கிறது. அதன் முக்கிய நோக்கங்களாவன:—

1. சாதுக்கள் சங்கஞ்சேர்ந்து வேதாந்த விசாரஞ் செய்தல்.
2. சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானஞ்செய்தல்.
3. இந்துமத அறிவைப் பரவச்செய்யும் துண்டுப் பத்திரிகைகளைப் பிரசுரித்தல்.
4. ஆயுள்வேதப்படி மணிமந்திர அவுடதங்களால் இலாபத்தை உத்தேசிக்காமல் நியாயமான விதத்தில் வைத்தியரைக்கொண்டு சிகிச்சை செய்வித்தல் இவை முதலியன.

**பலஜாதிகளின் காங்கிரஸ்சபை:**—லண்டன்பட்டணத்தில் வருகிற ஜூலைமீ 26உ முதல் 29உ வரை உலகத்தில் உள்ள பல தேசத்தார்கள், பலஜாதியார்கள், பலவர்ணத்தார்கள், இவர்களுடைய பிரதிநிதிகளான ஒரு மஹாசபை கூடப்பெறும். கூடுகிறவர்கள் சமமாக பாவிக்கப்படுவார்கள். உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை இராது. இந்தியா. ஜப்பான், சீனா, பார்சீகம், எகிப்து முதலான தேசங்களினின்று பிரதிநிதிகளாகப்போவார்கள். நம்தேசத்தின் பிரதிநிதிகளாக ஸ்ரீமான் கோகிலே, கனந்தங்கிய அமிராலி Sir. பாவநகரி, இன்னும் மற்றவர்களும் அச்சபையில் இருப்பார்கள். இச்சபையின் முக்கிய கருத்து என்னவென்றால் மதம், வர்ணம், முதலிய வெளி வேற்றுமைகளால் நிகழும் துவேஷத்தை தொலைத்தலும், உலக பொது ஜன சமுதாயத்தில் சிநேக பாவத்தை உண்டு பண்ணுதலும், விர்த்தி செய்தலுமாம். இச்சபை தலைமேற்கொண்ட காரியம் மிகவும் நலமுள்ளது. க்ஷேமகரமானது, உலகத்திற்கு நனிநன்மைபயக்கத்தக்கது.

## கும்பகோணத்தில் கூடிய பிரஹ்ம ஞானசங்கம்.

சென்ற பிப்பிரவரி௴ 18, 19௳களில் கும்பகோணத்தில், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பிரஹ்மஞானக் கிளைச் சங்கங்களின் பெரிய சபைகூடியது. 400 அங்கத்தினர்கள் கூடினார்கள். மதுரை, இராமநாதபுரம், திருச்சினாப்பள்ளி, சென்னை, கூடலூர், சிதம்பரம், முதலான இடங்களினின்றும் அங்கத்தினர்கள் (Theosophists) வந்திருந்தார்கள். ௸ சபை மிகவும் விமரிசையாகவும், உத்ஸாகத்துடனேயும் நடை பெற்றது. மாதஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் அக்கிராசனம் வகித்தார்கள்.

பிப்பிரவரி௴ 18௳ நடந்த விஷயங்கள்:—

கனம் தங்கிய ராவ்பஹதூர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் பெஸண்டு அம்மாளுடைய நல்வரவை விரும்பியும் நூதனமாகக் கட்டியிருக்கிற பிரஹ்ம வித்யா ஆலயத்தை ஆசீர்வதித்து கிருஹப்பிரவேச உத்ஸவத்தை நடத்தும்படிக்கும் ஒரு விரிவான பத்திரிகை படித்தார்கள். பின்பு மேளதாளத்துடனே அம்மையார் தலைவராக முன் செல்ல பிரஹ்மஞான அங்கத்தினர்களும், மற்றைய ஜனங்களும் பின் செல்ல கிருஹப்பிரவேசம் நடைபெற்றது. பிரஹ்மஞான சபையின் நோக்கங்களைப்பற்றி அம்மாள் உபந்நியாஸம் செய்தார்கள். பிறர் பிரஹ்மஞான சபையையும், பிரஹ்மஞானத்தையும் பற்றி தூஷித்தாலும், பரிஹஸித்தாலும், அதற்கு எதிரிடையாக நாமும் அவ்விதம் செய்தல் நலமன்று என்பதாக வற்புறுத்திச் சொன்னார்கள்.

"The Prince of Wales" பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தியேட்டர் என்ற நாடகக்கொட்டகையில் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பிரஹ்மஞானக்கிளைச் சங்கங்களின் கான்பிரென்ஸ் (Conference) கூடியது. சுமார் 2000 ஜனங்கள் கூடினார்கள். மகா-௱-௱-ஸ்ரீ, பென்ஷன் டிப்டிகலெக்டர் T. N. ராமச்சந்திரய்யர் அவர்கள், உபசரணையாக சில வார்த்தைகள் மொழிந்தார்கள். பின்பு அம்மையார் ஒரு பிரஹ்மஞானக்கிளைச் சபை நடத்தவேண்டிய முறையைப் பற்றியும், கிளைச்சபை இருக்கிற இடத்தில் ஏழைகளுக்கு உதவி புரிதலும் கல்வி அபிவிருத்தி செய்தலும் ஞானப்பயிற்சியும் இவை போன்ற சத்கர்மங்கள் செய்யப்பாலது என்பதாகவும், விஸ்தாரமான உபந்நியாஸம் செய்தார்கள். பின்பு அன்று சாயங்காலம் ஹிந்துமதத்தின் ஞான டாகமும் பிரஹ்மஞானமும் ஒரே தன்மையான வெனவும், இரண்டிற்கும் வேற்றுமை இல்லையெனவும் தமிழில் மதுரை ப. நாராயண அய்யர் உபந்நியாஸம் செய்தார். அதன்மேல் Porter Town Hall என்ற விடத்திற்கு எல்லோரும் சென்றார்கள். ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. 3000 வரை ஜனங்

கள் இருந்தார்கள். மகா-ா-ா-ஸ்ரீ எ. சி. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் கும்பகோணம் ஜனங்களுக்காகத் தாம் ஒரு நல்வரவுப் பத்திரம் உபசரணையாக அம்மையாரை உத்தேசித்து படித்தார். பின்பு அம்மையார் எல்லா மதங்களின் மூலதத்துவங்கள் ஒரே மாதிரியாக உள்ளன என்றும், மதங்கள் வேற்றுமையுள்ளவைகளாகத் தோன்றினும் ஆராய்ந்துபார்க்கில், உண்மையில் மாறுபடும் கருத்து இல்லையென்றும், இன்னும் சில விவரமாய் உபந்நியாஸம் செய்தார்கள். அதைக்கேட்டு மனம் உருகாதவர்கள் அப்பெரிய மஹா சபையில் ஒருவரும் இல்லையென மதிக்கலாம்.

**19-ம்தேதி நடந்த விஷயங்கள்:—**

கும்பகோணம் பிரஹமவித்யா கிளைச்சபையால் "ஸ்ரீஸரஸ்வதி பாடசாலை" என்று பெயருள்ள ஒரு பெண் பாடசாலை நடத்தப்பட்டுவருகிறது. அதின் வருஷோத்ஸவம் அன்று காலை நடத்தப்பட்டது. மாதா ஸ்ரீ. அன்னிபெஸன்ட் அம்மையார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். குழந்தைகள் தமிழ் ஸம்ஸ்கிருத சுலோகங்களைப் பாடினார்கள். 'அருமை' நாடகத்தை மிகவும் புத்திசாதுர்யத்துடனே நடித்துக் காட்டினார்கள். குழந்தைகளுக்குப் புஸ்தகங்கள் முதலிய பரிசுகள் அம்மையாரால் அளிக்கப்பட்டன. பின்பு, பெண்கல்வியைப்பற்றி விஸ்தாரமான உபந்நியாஸத்தை அம்மாள் செய்தார்கள், நம் இந்துதேசம் உயர்நலம் பெறவேண்டுமாகில் பெண்கல்வி விஸ்தாரமாய்ப் பரவவேண்டுமென்றும், ஆழ்ந்ததாயிருக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அன்று சாயங்காலம் கடைசியான உபந்நியாஸம் அம்மையார் செய்தது பிரஹமஞான சபையால் இந்தியா தேசத்திற்கு உண்டாகும் பிரயோஜனத்தைப் பற்றியதாம். அச்சபையால் இதுவரையில் அடைந்த நலத்தைத் தவிர இன்னும் உயர்நலம் இந்தியாதேசம் அடையப்போகிறதென்றும், இந்தியாதேசம் மேன்மையடைவதற்கு அச்சபைதான் முக்கிய சாதனமென்றும் சொன்னார்கள். அம்மையாரிருந்த இரண்டுதினமும் அவ்வூரிலிருந்த அறிஞர்களின் மனம் குளிரும்படியாகவும், உத்ஸாகம் பெறும்படியாகவும் பல உபந்நியாஸங்களும் சம்பாஷணைகளும் நிகழ்ந்தன. சபையை தூஷித்த சிலர் தங்களுடைய ஆக்ஷேபணைகளை வெளிவந்து சொல்லாமல், உள்ளடங்கி மௌனம் சாதித்தனர்.

கும்பகோணத்தின் பிரஹமஞான கிளைச்சபையார் அதிதியின் உபசரணை அதாவது விருந்தோம்பல் என்ற தர்மத்தை நன்றாய் நடத்தினார்கள். எல்லாம் நன்றாயும், நிர்விக்கினமாயும் இறைவனருளால் நடைபெற்றன.

பத்திராதிபர்.

427

# பூர்ணசந்திரோதயம்

## அறிவிப்பு.

---

அடுத்த மாசத்தின் பத்திரிகையோடு இப்பத்திரிகைக்கு ஒரு
ஆண்டு நிறைவாகிறது. வருகிற மேயீ 15உயில் இப்பத்திரிகை
யின் இரண்டாம் ஆண்டு ஆரம்பமாகிறது. பத்திரிகையை முதலில்
32 பக்கங்கள் அடங்கியதாக வெளிப்படுத்துவதாக உத்தேசித்
தோம். இப்போது, இம்மாசத்தின் பத்திரிகையின் கடைப்பக்கத்
தைப் பார்த்தாலே, 380 ஆகிறது. இனி வருகிற மாசம் பத்
திரிகை யின்பக்கம் 32-க்குக் குறையாமல் ஏற்படும். ஆக, 412 பக்
கமுள்ளதாக இப்பத்திரிகையின் முதற்றொகுதி (Volume) ஏற்ப
டும். நாம் ஆரம்பத்தில் உத்தேசித்தபடி 12×32=384 பக்கம் தான்
ஏற்பட வேண்டுவது. மேற்கொண்டு 28 பக்கம் அதிகமாகச் சந்தா
தார்களுக்கு அளித்திருக்கிறோம். வருகிற இரண்டாம் வருஷத்தில்
ஒவ்வொரு மாதமும் 40 பக்கத்திற்குக் குறையாமல் பத்திரிகையை
வெளிப்படுத்துவதாக உத்தேசித்திருக்கிறோம். அவ்வுத்தேசம் திரு
ப்தியாக நிறைவேறும்வண்ணம், சந்தாதார்கள் முன்பணம் அனுப்
புவதுடன், தம்மால் இயன்றவரை, ஒவ்வொருவரும் ஓர் ஓர் புதிய
சந்தாதாரைச் சேர்ப்பிக்கும்பக்ஷத்தில், பத்திரிகை இன்னும் அதிக
நலம் பெறும்படியாக முயற்சிப்போம். பக்கங்கள் அதிகப்படுத்தப்
பெற்றாலும் முன்னுள்ள இரண்டே ரூபாய்தான் வருஷச் சந்தாவா
கும். நல்ல வெண்மையான கடிதாசியில் முத்துப்போன்ற அக்ஷர
ங்களால் அமைக்கப்பெற்ற உயர்ந்த விஷயங்கள் இப்பத்திரிகையின்
மூலமாய் வெளிவருகின்றன என்பதை யாவரும் அறிவார்.

இப்பத்திரிகை இன்னும் அதிகமாகப் பரவும்படி நம் ஜனங்
கள் உதவிபுரிவார்கள் என்று பிரார்த்திக்கிறோம்.

ப. நாராயணன்,

பத்திராதிபர்,

பூர்ணசந்திரோதயம்,

15—3—11.

## பூர்ணசந்திரோதய விளம்பரம்.

—o—

## சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.

தனிப்பிரதி விலை அணா நாலு.

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒருபக்கம் | 1 மாசம் ரூ | 2—8—0 | அரைப்பக்கம் | 1 மாசம் ரூ | 1—8—0 |
| ,, | 3 ,, | 6—0—0 | ,, | 3 ,, | 3—8—0 |
| ,, | 6 ,, | 11—0—0 | ,, | 6 ,, | 6—0—0 |
| ,, | 1 ௵ | 18—0—0 | ,, | 1 ௵ | 10—0—0 |

சந்தா முதலிய யாவும் அடியிற்கண்டவருக்கு அனுப்பவேண்டும்.

ப. நாராயணையர்,

பத்திராதிபர், "பூர்ணசந்திரோதயம்." மதுரை.

---

## புஸ்தக விளம்பரம்.

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் விலை அணா 6

மனிதன் வமிசாவளியின் உண்மை ... ... ,, 4

ஹிந்துமத தூஷணபரிகாரம் ... ... ,, 4

Avayar's Yoga Aphorisms in English ... Price 4 Annas

தபாற்கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,

பிரசிடெண்டு, பிரஹ்மஞானசபை, மதுரை.

அல்லது

Manager, Theosophist Office, Adayar, Madras. S.

## வைத்தியபோதினி.

சித்திரங்களுடன் கூடிய வைத்தியத்தைப் பற்றிய ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. வருஷசந்தா ரூ 1.

டாக்டர். சந்திரசேகரர், கும்பகோணம், பத்திராதிபர்.

---

## ADVERTISEMENT.

# இந்து சாஸ்திராபிமானி.

இத்தலைப்பெயரிட்ட புஸ்தகமொன்று அடியிற் கையொப்பமிட்டவரால் இனிய செந்தமிழ் நடையில் நவீனமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் இந்துமத கோட்பாடுகளையும் பொது நன்மைகளையும் தழுவிப்பேசுகிற அநேக உபந்நியாசங்களும் திருவாங்கூரை அரசாட்சிசெய்த பூர்வீக அரசர்களுடைய சரித்திரங்களும் இவர்களிடம் மந்திரிவேலையில் அமர்ந்திருந்த தேர்ந்த புத்திசாலிகளாகிய மிஸ்டர் தளவாய் ராமய்யர், ஸர். டி. மாதவராவ், ஆனரபில் ராமய்யங்கார் முதலிய மேதாவிகளின் சரித்திரங்களும் அடங்கி இருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை உயர்ந்த நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற அட்சரங்களாக பொறுக்கியெடுத்து 8பேஜுள்ள 16 பாரத்தில் 128 பக்கம்வரை அச்சிடப்பட்டிருக்கின்றது. வேண்டுவோர் தங்கள் பெயர், ஊர், போஸ்டு முதலிய பூராவிலாசங்களையும் எனக்குத் தெளிவாக எழுதும்பக்ஷத்தில் கல்லிடைக்கும்மி ஸகிதம் போஸ்டேஜ் உள்பட 6 அணா விலைக்கு வி. பி. மூலம் அனுப்புவேன்.

# ஆரியஜன போதினி.

இந்நூதன தமிழ்புஸ்தகத்தில் இந்தியாவின் முற்கால தற்கால நிலைமைகளையும், அக்காலங்களிலுள்ள அரசர்களின் ஆட்சி முறைகளும், கைத்தொழில் விஷயங்களும், பிராசீன மகரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கின்ற தர்ம சூட்சுமங்களும், அந்நி பெஸாண்டு அம்மையவர்களின் அருமையான உபந்நியாசங்களும், தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்கு உழைத்து வருகின்ற சிறந்த பெரும் முயற்சிகளும், அவரது சரித்திரமும், ஸ்ரீ கிர்ஷ்ண மூர்த்தியின் ஸத்கிருத்ய மஹிமைகளும் விவேகானந்த ஸ்வாமிகளால் உபதேசிக்கப்பட்ட வேதாந்தத்தின் கருத்துக்களும், ஸநாதனதர்மம் நிலைத்திருக்கும்பொருட்டு கர்னல் ஆல்காட் துரையவர்களால் செய்யப்பட்டிருக்கிற காரியங்களும், பாஞ்சாலி யென்னும் பதிவிரதா சிரோன்மணியை மானபங்கம் செய்யமுயன்ற துச்சாதனன் அவமானமடைந்ததும், ராஜஸூயயாகத்தில் தர்மபுத்திரருக்கும் சிசுபாலனுக்கும் நேரிட்ட வாக்குவாதங்களும், பஞ்சாப், வங்காளம், டில்லி, பாட்னா, முதலியவைகளை யொத்தபிறவிடங்களில் நவீன வியவஸாய சாஸ்திரத்தை யனுசரித்து செய்யப்படுகின்ற வியவஸாய முறைகளும், இதுபோல் இன்னும் அனேக அற்புதவிஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. குறித்தபுஸ்தகம் விலை யுயர்ந்தகிளேஸ் பேபரில் பாரம் 8 பேஜ் ஸைஸில் 120 பக்கங்கள்வரை நல்ல செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இது ஸ்ரீராம, கிருஷ்ண மூர்த்திகளின் படங்கள் ஸகிதம் பிறமத தூஷணையின்றி பலமேல்விலாசங்களுடன் ஸகல மதஸ்தர்களுக்கும் பொதுவாக இயற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு வி. பி. சார்ச்சுடன் விலை அணா-10. ஸிலோன் முதலிய வெளிநாடுகளுக்கு ஒரு அணா ஜாஸ்தியாகச் சார்ச்சு செய்யப்படும். வேண்டுவோர் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டு எனக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**வா. முத்துகிருஷ்ண அய்யர்,**

இந்து சாஸ்திராபிமானி,

கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.

ADVERTISEMENT

# பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். } ஸ்ரீ காசி. { பட்டு பீதாம்பர காட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ளமாலை 1-க்கு 6 அணா முதல் ரூபா 12-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக்கண்டிகள் 33 உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10 முதல் ரூபா 10 வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்.

சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 முழம் 1க்கு ரூபா | 0 | 14 | 0 | | 9 முழம் 1க்கு ரூபா | 2 | 0 | 0 |
| 6 ஷை | 1 | 4 | 0 | | 10 ஷை | 2 | 8 | 0 |
| 7 ஷை | 1 | 8 | 0 | | 12 ஷை | 3 | 8 | 0 |
| 8 ஷை | 1 | 12 | 0 | | 15 ஷை | 4 | 8 | 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், கைலாசம், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழ அகலம். செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0. தபால்செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள் விளையாடக்கூடியபித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் கைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்.

விலாசம்: மானேஜர்,

## பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, Benares City.